بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 6

தொகுதி 6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

28 ஜமாதிஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி 11 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்

11 பிப்ரவரி 2021


## அல்லாஹ்வின் கட்டளை

مَا يَفْعَلُ اللّٰهُ بِعَذَابِكُمْ

اِنْ شَكَرْتُمْ وَاٰمَنْتُمْ ؕ

وَكَانَ اللّٰهُ شَاكِرًا عَلِيْمًا

நீங்கள் நன்றி செலுத்தி, நம்பிக்கையும் கொள்வீர்களாயின், உங்களைத் தண்டிப்பதில் அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப்போகிறது? அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு அறிபவனாவான். (4:148)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அல்லாஹ் எனக்கு நான் வகையான அடையாளங்களை வழங்கியுள்ளான். அதனை நான் பெரும் வாதத்துடன் பல்வேறு முறை எழுதியும், வெளியிட்டும் உள்ளேன்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அல்லாஹ் எனக்கு நான்கு வகையான அடையாளங்களை வழங்கி இருக்கின்றான் என்பதை நான் பெரும வாதத்துடன் பல்வேறு முறை எழுதியும், வெளியிட்டும் வந்துள்ளேன். இதனை நான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளேன்.

முதலாவது (அடையாளம்): அரபி மொழிப் புலமை எனும் அடையாளமாகும். முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இந்த எளியவனுக்கு அரபியின் ஒரு வாய்ப்பாடு கூட தெரியாது என்று எழுதிய நேரத்திலிருந்து இந்த அடையாளம் எனக்கு கிடைத்துள்ளது. ஆனால் அதற்கு முன்பு நாம் ஒருபோதும் எமக்கு அரபி வாய்ப்பாடு தெரியும் என்று வாதம் செய்திருக்கவில்லை. அரபியில் எழுதுவதற்கும், மேலும் (அரபி மொழி) இலக்கணத்தையும் அறிந்த மக்கள் அதிலுள்ள கஷ்டங்களை அறிவர். மேலும் அதன் சிறப்புகளையும் அவர்கள் கருத்தில் கொள்வர்.

மவ்லவி சாஹிப் (அதாவது அப்துல் கரீம் சாஹிப்) ஆரம்பம் முதலே அல்லாஹ் எமக்கு அற்புதமான முறையில் உதவி செய்துள்ளான் என்பதை பார்த்து வருகின்றார்கள். நடைமுறை மொழியில் உகந்த சொற்கள் கிடைக்காதபோது மிகுந்த கஷ்டம் ஏற்பட்டு விடுகின்றது. அந்நிலையில் அல்லாஹ் அந்த சொல்லை உள்ளத்தில் போட்டு விடுகின்றான். புதிய மற்றும் செயற்கை மொழியை உருவாக்கிக் கொள்வது எளிதாகும். ஆனால் நடைமுறை மொழி கடினமாகும். பின்னர் நாம் எமது அந்த புத்தகங்களில் முன்னரே உறுதியான வெகுமதிகளுடன் வெளியிட்டுள்ளோம். மேலும் நீங்கள் யாரிடம் விரும்புகின்றீர்களோ உதவி பெற்றுக் கொள்ளுங்கள்; மேலும் அரபி மொழியை தாய் மொழியாக கொண்டவர்களையும் கூட அழைத்துக் கொள்ளுங்கள். ஆயினும் அவர்களால் ஒருபோதும் இயலாது என்று எனக்கு இறைவன் உறுதி அளித்துள்ளான். ஏனெனில் இந்த அடையாளம் திருக்குர்ஆனின் அற்புதங்களிலிருந்து நிழல் வடிவில் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கூறினோம்.

இரண்டாவது (அடையாளம்): துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதாகும். அரபியில் நூற்கள் எழுதும்போதே எந்த அளவிற்கு அதிகமாக எனது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை அனுபவ ரீதியாக நான் கண்டுள்ளேன். ஒவ்வொரு சொல்லிற்காகவும் நான் துஆ செய்துள்ளேன். மேலும் நான் இந்த விஷயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயக (ஸல்) அவர்களை விதிவிலக்காக காண்கின்றேன். (ஏனென்றால் அன்னாரின் மூலமாகவும், அன்னாரை பின்பற்றியதன் காரணமாகவும் தான் எனக்கு இவை அனைத்தும் கிடைத்துள்ளன). எனது துஆக்கள் எந்த அளவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் அதுபோன்று வேறு எவருடையதும் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று என்னால் கூற முடியும். அது பத்தாயிரமா அல்லது இரண்டு லட்சமா அல்லது அது எத்தனை என்பதை என்னால் கூற முடியாது. சில ஒப்புக் கொள்ளப்பட்ட அடையாளங்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் அதனை ஓர் உலகமே கண்டுள்ளது.

மூன்றாவது (அடையாளம்) முன்னறிவிப்புகளுக்கான அடையாளமாகும். அதாவது மறைவானவற்றை பற்றிய வெளிப்பாடு. பொதுவாக ஜோதிடர்களும் யூகங்களின் மூலமாக சில விஷயங்களை கூறி விடுகின்றனர். அதில் ஏதாவது ஒரு பகுதி சரியாகவும் அமைந்து விடுகின்றது. அதேபோன்று வரலாறு நமக்கு கூறுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மறைவான செய்திகளை கூறி வந்த சில பூசாரிகள் இருந்து வந்தனர். சத்தீஹ் என்ற ஒரு பூசாரி இருந்தான். ஆயினும் இந்த பூசாரிகள் மற்றும் ஜோதிடர்கள் மறைவான செய்தியை கூறுவதற்கும், இறைவன் புறமிருந்து தோன்றிய மற்றும் இல்ஹாம் கிடைக்கப்பெற்ற ஒரு நபர் மறைவான செய்திகளை வெளிப்படுத்துவதற்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. அது என்னவென்றால், இல்ஹாமைப் பெற்றவர் மறைவான செய்தியை வெளிப்படுத்தும்போது தன்னுள் இறை ஆற்றலையும், இறைவன் மீதான அச்சத்தையும் கொண்டிருக்கின்றார். இது பற்றி திருக்குர்ஆன் மிகத்தெளிவாக فَلَا يُظْهِرُ عَلٰى غَيْبِهٖٓ اَحَدًا اِلَّا مَنِ ارْتَضٰى مِنْ رَّسُوْلٍ என்று கூறுகின்றது. (அல் ஜின்:27,28)

இங்கு வெளிப்பாடு என்ற சொல்லே அதனுள் ஒரு பொலிவும் ஆற்றலும் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

நான்காவது அடையாளம், திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெறுதலாகும். ஏனென்றால் தூய்மைப்படுத்தப்பட்ட நபரைத் தவிர்த்து வேறு எவருக்கும் திருக்குர்ஆனின் ஞானம் வழங்கப்படுவதில்லை.

لَا يَمَسُّهٗٓ اِلَّا الْمُطَهَّرُوْنَ

எனது எதிரிகளும் ஓர் அதிகாரத்திற்கு தஃப்ஸீர் (விரிவுரை) எழுதட்டும். நானும் தஃப்ஸீர் எழுதுகிறேன். பின்னர் அதனை ஒப்பிட்டு பார்ப்போம் என்று பல முறை நான் கூறியுள்ளேன். ஆயினும் எவரும் அதற்கு துணியவில்லை. (முஹம்மது ஹுஸைன் போன்றவர்கள்), இவருக்கு அரபி வாய்ப்பாடு தெரியாது என்று கூறியிருந்தனர். ஆனால் புத்தகங்கள் முன் வைக்கப்பட்டபோது இந்த அரபி என்பது வீணானது மற்றும் சாதாரணமானது என்று மலிவான காரண காரியங்களை கூறி தவிர்ந்து கொண்டனர். ஆனால் ஒரு பக்கத்தை கூட எழுதி முன் வைத்து இது அரபி ஆகும் என்று அவர்களால் காட்ட முடியவில்லை.

சுருக்கமாக, எனது உண்மைத்துவத்திற்காக குறிப்பாக எனக்கு இந்த நான்கு அடையாளங்கள் கிடைத்துள்ளன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 252 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீதின் 62வது ஆண்டில் முழு உலக ஜமாஅத்தும் ஒரு கோடியே ஐந்து லட்சத்து முப்பது ஆயிரம் பவுண்ட் பொருள் தியாகம் செய்துள்ளது**

**வக்ஃபே ஜதீதின் 63வது ஆண்டு துவங்கியதற்கான அறிவிப்பு மற்றும் முழு உலகிலும் வசிக்கக்கூடிய அஹ்மதிகளின் பொருள் தியாகம் பற்றிய நற்குறிப்பு**

**ஒவ்வொரு மட்டத்தில் உள்ள அஹ்மதிக்கும் சுய அனுபவம் உள்ளது. அதாவது அல்லாஹ்வுக்காக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவன் வழியில் செலவு செய்வது, எங்கு மன நிம்மதிக்குக் காரணமாகிறதோ அங்கு உலக ரீதியாகவும் ஆயிரக்கணக்கான மக்கள், வியப்பூட்டக்கூடிய வகையில் தாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகக் கொடுத்திருந்த தொகையை அல்லாஹ் திருப்பித் தரக்கூடிய அனுபவத்தைப் பெறுகின்றனர். ஆனால் நிபந்தனை என்னவென்றால், நல்ல நிய்யத்தோடு இறைவனின் திருப்தியை பெறுவதற்காகத் தியாகம் செய்ய வேண்டும். அதற்காக ஏனைய கட்டளைகளையும் நன்மைகளையும் கூட செயலாற்ற வேண்டும். பொருள் மட்டும் கொடுத்துவிட்டு, நான் மிக அதிகமாகத் தியாகம் செய்து விட்டேன்; மற்ற கடமைகளையும் நிறைவேற்றி விட்டேன் என்று நினைத்துக் கொள்வது கூடாது. மற்ற நன்மைகளை செயலாற்றுவதும் அவசியமாகும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 ஜனவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ - اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

مَنْ ذَا الَّذِيْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗٓ أَضْعَافًا كَثِيْرَةً وَاللّٰهُ يَقْبِضُ وَيَبْصُۜطُ وَإِلَيْهِ تُرْجَعُوْنَ

அல்லாஹ்வுக்கு சிறந்த கடனைக் கொடுப்பவர் யார்? அதன் காரணமாக அவன் அவருக்கு அதனைப் பன்மடங்காகப் பெருகச் செய்வான். அல்லாஹ் ரிஸ்கைக் கட்டுப்படுத்தியும் கொடுக்கின்றான். விரிவாகவும் வழங்குகின்றான். நீங்கள் அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள். (2:246)

இந்த வசனத்தில், அல்லாஹ்வுக்கு கடன் கொடுப்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்கு மனிதனின் செல்வத்தின் தேவையுள்ளது. அவன் தனது தேவையை நிறைவேற்றுவதற்காக கடன் கேட்கின்றான் என்பது இதற்கு பொருளல்ல. நவூதுபில்லாஹ்! (அவ்வாறு பொருள் கொள்வதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.) கடனுக்கு ஒரு பொதுவான பொருள் உள்ளது. நாம், கடன் கொடுக்கல் வாங்கலுக்காக அதைப் பயன்படுத்துகின்றோம். யாரிடமாவது கடன் பெற்றோம்; கொடுத்தோம் (போன்ற பொருளில்). ஆனால் இதன் அகராதி பொருள், நல்ல அல்லது தீய கைமாறு என்பது ஆகும். இங்கு இதன் பொருளானது, அல்லாஹ் தனக்கு அதற்கான சிறந்த வெகுமதி வழங்குவதற்காக அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர் யார்? என்பதாகும்.

ஆக எங்கு அல்லாஹ்வுக்காக செலவு செய்வது மற்றும் கொடுப்பது குறித்த கேள்வி எழுகிறதோ; அது அல்லாஹ் அந்த செயலை செய்யக்கூடியவருக்கு சிறந்த வெகுமதி வழங்குகின்றான் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது ஆகும். அதாவது அல்லாஹ்வுக்காக செலவு செய்கின்றோம்; அல்லாஹ்வுக்குக் கொடுக்கின்றோம் என்றால், அல்லாஹ் அதற்கான சிறந்த வெகுமதி வழங்குகின்றான். திருக்குர்ஆனில் இன்னும் பல இடங்களில், தியாகங்கள் மற்றும் பொருள் தியாகங்கள் பற்றி அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அல்லது அல்லாஹ்வின் படைப்பினங்களின் மேம்பாட்டுக்காக செலவு செய்வதை, அல்லாஹ்வுக்காகவே செலவு செய்வதற்கு நிகராக வைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்காக செலவு செய்யப்படுவது வீண்போவதில்லை. மாறாக, இது எத்தகைய கடன் என்றால், அதை அல்லாஹ் பன்மடங்கு அதிகரித்துத் திருப்பிக் கொடுக்கின்றான். எனவே அல்லாஹ்வுக்கு ஏதோ கடனின் தேவை இருப்பதாக யாரும் புரிந்து கொள்ள வேண்டாம்.

அல்லாஹ்வோ சுயமே ரப்பாக உள்ளான். அனைத்துலகங்களையும் பரிபாலிக்கக் கூடியவன்; வழங்கக்கூடியவன். அவனுக்கு யாருடைய தேவையும் இல்லை. அவன் தனக்காக, கடன் எனும் சொல்லைப் பயன்படுத்தும்போது, அதன் பொருள், எனது வழியில் செலவு செய்யுங்கள்; எனது எண்ணற்ற அருட்களைப் பெறக்கூடியவர்களாகுங்கள் என்பதாகும்.

எனக்கு சிறந்த கடனை கொடுப்பவர் யார்? என்ற கேள்வியை எழுப்பி, எனது வழியில் செலவு செய்து, எனது எண்ணற்ற அருட்களுக்கு வாரிசகாகக்கூடியவர்; ஆகிக் கொண்டே செல்லக்கூடியவர் யார்? என்பதன் பால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து சுயமே இதற்கு விளக்கமும் அளித்து விட்டான். என்னிடம் வைத்துக் கொள்வதற்காக, எனது தேவைக்கு செலவு செய்வதற்காக இந்தக் கடனை நான் உங்களிடம் கேட்கவில்லை. மாறாக, உங்களுக்குப் பன்மடங்கு அதிகரித்துத் தருவதற்காக உங்களிடமிருந்து இந்தக் கடனை பெறுகிறேன். அதற்காக கூறுகிறேன். நீங்கள் எனது மார்க்கத்திற்காக என்னுடைய படைப்பினங்களின் மேம்பாட்டுக்காக செலவு செய்வீர்களாயின் என்னுடைய படைப்பினங்களின் மேம்பாட்டுக்காக செலவு செய்வீர்களாயின் பன்மடங்கு அதிகரித்து உங்களுக்குத் திருப்பிக் கொடுப்பேன். சிறந்த கடன் எனும் சொல்லைப் பயன்படுத்தி, நீங்கள் உங்கள் விருப்பத்துடன் மன மகிழ்ச்சியுடன் இந்த செயலை செய்தால், பிறகு இத்தகைய செலவு இறைவழியில் இருக்கும். அது உங்கள் சார்பாக சிறந்த கடனாக இருக்கும்; அல்லாஹ்வும் அதைப் பன்மடங்கு அதிகரித்துத் திருப்பிக் கொடுப்பான் என்பதையும் கூறிவிட்டான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு சபையில் இது தொடர்பாக எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் கடன் கேட்பதன் மூலம் அல்லாஹ்வுக்குத் தேவை இருக்கிறது; அவன் தேவையுடையவன் என்பது பொருளாகாது. நவூதுபில்லாஹ்! (அவ்வாறு பொருள் கொள்வதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.) இவ்வாறு கற்பனை செய்வது கூட குஃப்ர் அதாவது நிராகரிப்பாகும். மாறாக, இதன் பொருள் என்னவெனில், வெகுமதியோடு திருப்பித் தருவேன். அதாவது அதிகரித்துத் தருவேன். இது அல்லாஹ் தான் நாடுபவர் மீது அருள் புரியும் ஒரு வழிமுறையாகும்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

مَنْ ذَا الَّذِيْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا அதாவது அல்லாஹ்வுக்கு கடன் கொடுப்பவர் யார்? இதன் பொருள், அல்லாஹ் பசித்திருக்கின்றான் என்பதாகும் என்று அறிவிலி கூறுகிறார். நவூதுபில்லாஹ்! (இவ்வாறு பொருள் கொள்வதிலிருது நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகின்றோம்). முட்டாள் புரிவதில்லை. அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வாறு கூறுபவர்கள்

முட்டாள்களாவர். இதன் மூலம், பசித்திருப்பது எங்கிருந்து வெளிப்படுகிறது என்பதை முட்டாள் புரிவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இங்கு கடன் என்பதன் சரியான பொருள் என்னவென்றால், திருப்பித் தருவதற்கான வாக்குறுதி உள்ள பொருட்கள். கடனோ திருப்பித் தருவதற்காகவே இருக்கிறது. மேலும் அத்துடன் வாக்குறுதி இருக்கிறது.

அன்னார் கூறுகிறார்கள்: அத்துடன் ஏழ்மை என்ற சொலைத் தன் தரப்பிலிருந்து இணைத்துக் கொள்கிறார். அதாவது ஆட்சேபனை செய்யக் கூடியவர் ஏழ்மை என்ற சொல்லை அல்லது வறுமை என்ற சொல்லை, அல்லாஹ்வுக்குத் தேவை என்ற சொல்லைத் தன் தரப்பிலிருந்து இணைத்துக் கொள்கிறார். அல்லாஹ்வோ, நான் பசித்திருக்கிறேன்; ஏழ்மையாக இருக்கிறேன். எனவே எனக்குத் தாருங்கள்; நான் எனக்காக செலவு செய்ய வேண்டும் என்று கூறவில்லை. எனினும் எனது அடியாருக்காக, எனது அடியார்கள் பசித்திருக்கும்போது, நீங்கள் கொடுப்பீர்களாயின் அவர்களுக்கு செலவு செய்வீர்களாயின், நீங்கள் எனக்கு செலவு செய்ததாகப் பொருளாகும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

அன்னார் கூறுகிறார்கள்: இங்கு கடன் என்பதன் பொருள், அல்லாஹ்வுக்கு நற்செயல்களைக் கொடுப்பவர் யார்? என்பதாகும். அல்லாஹ் அவர்களுக்கான வெகுமதியை அதை விடப் பன்மடங்கு அதிகரித்துத் தருகிறான். எந்த நற்செயலாகவும் இருக்கட்டும், அல்லாஹ்வுக்காக செய்தீர்கள் என்றால், அல்லாஹ் அதை அதிகரித்துத் தருகிறான். வெறும் காசு பணம் பற்றிய விஷயம் மட்டுமல்ல.

மேலும் கூறுகிறார்கள்: இந்த விஷயம் அல்லாஹ்வின் மேன்மைக்கு உரியதாகும். அடியார்களுக்கு இறைவனோடு உள்ள தொடர்பு குறித்து ஆழ்ந்து சிந்திக்கும்போது, இதன் பொருள் தெளிவாகத் தெரிய வருகிறது. ஏனெனில் அல்லாஹ் யாருடைய நன்மையும் துஆவும் மன்றாடலும் இல்லாமல், மூமின் காஃபிர் என்ற பாகுபாடில்லாமல் ஒவ்வொருவரையும் பரிபாலிக்கின்றான். அல்லாஹ்வோ, ஒருவர் காஃபிராக இருக்கட்டும்; மூமினாக இருக்கட்டும் ஒவ்வொருவரையும் பரிபாலிக்கின்றான். தனது பரிபாலிக்கும் பண்பு மற்றும் கருணை புரியும் பண்பின் அருளால் எல்லார் மீதும் அருள் பாலிக்கிறான். பிறகு அவன் ஒருவருடைய நன்மையை எப்படி வீணடிப்பான்?

எந்த நன்மையும் இல்லாமல் எந்தப் பணியும் இல்லாமல் அல்லாஹ் அனைவரையும் பரிபாலிக்கின்றான்; அனைவருக்கும் வழங்குகின்றான் எனும்பொழுது பிறகு ஒருவர் நன்மை செய்வார்; நற்செயலாற்றுவார் எனில் பிறகு அதை அல்லாஹ் வீணடித்து விடுவதும், அதற்கான வெகுமதியை வழங்காமலிருப்பதும் எவ்வாறு ஏற்பட முடியும்? அவனது மேன்மையோ இவ்வாறு இருக்கிறது.

مَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَّرَهٗ (99:8)

ஒருவர் அணுவளவு நன்மை செய்தாலும் அதற்கும் வெகுமதி வழங்குகின்றான். அணுவளவு தீமை செய்தாலும் அதற்கான இறுதி முடிவும் கிடைக்கும். இதுவே இந்த வசனத்திலிருந்து பெறப்படும், கடன் என்பதன் அசல் பொருளாகும். கடன் என்பதற்கான அசல் பொருள் இதிலிருந்து பெறப்பட்டால்,

مَنْ ذَا الَّذِيْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا (அல்லாஹ்வுக்கு சிறந்த கடனைக் கொடுப்பவர் யார்?) என்றே கூறிவிட்டான். (2:246). அதற்கான விளக்கம் مَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَّرَهٗ எனும் வசனத்தில் உள்ளது.(99:8)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 226,227)

எனவே அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்காகப் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுவதற்காகப் பொருட் தியாகம் செய்வதும் ஒரு மிகப்பெரிய நன்மையாகும். அல்லாஹ் அதை ஒருபோதும் வெகுமதியின்றி விடுவதில்லை. திருக்குர்ஆனில் மற்ற இடத்தில் அல்லாஹ் இதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளான்.

பொருள் தியாகம் குறித்து ஜமாஅத் மக்களை விடச் சிறந்த முறையில் யார் அறிய முடியும்? ஒவ்வொரு மட்டத்தில் உள்ள அஹ்மதிக்கும் சுய அனுபவம் உள்ளது. அதாவது அல்லாஹ்வுக்காக அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுவதற்காக அவன் வழியில் செலவு செய்வது, எங்கு மன நிம்மதிக்குக் காரணமாகிறதோ அங்கு உலக ரீதியாகவும் ஆயிரக்கணக்கான மக்கள், வியப்பூட்டக்கூடிய வகையில் தாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகக் கொடுத்திருந்த தொகையை அல்லாஹ் திருப்பித் தரக்கூடிய அனுபவத்தைப் பெறுகின்றனர். இவ்வாறு பல அஹ்மதிகள் உள்ளனர். அவர்கள் தியாகம் மட்டுமே செய்கின்றனர். அதாவது தியாகம் என்ற பெயரிலே தியாகம் செய்கின்றனர். அல்லாஹ் திருப்தியடைந்து விட வேண்டும் என்ற ஆசை மட்டுமே இருக்கிறது. அவர்களது உள்ளத்தில் இதற்கான வெகுமதி அவர்களுக்கு உலகில் கிடைத்து விடும். அல்லது உலக செல்வத்தின் வடிவில் கிடைத்து விடும் என்ற சிந்தனை கூட இருப்பதில்லை.

ஆனால் நான் அதைச் சிறந்த முறையில் திருப்பித் தருவேன் என்று அல்லாஹ் கூறுவதற்கேற்ப, அவன் திருப்பித் தந்து விடுகின்றான். சிலர் மோசமான நிலைமைகளுக்கு மத்தியிலும் தியாகம் செய்து விடுகின்னறனர். அல்லாஹ் அவர்களின் சொந்தத் தேவைகளை ஏதாவதொரு வகையில் நிறைவேற்றி விடுவான் என்று நம்பிக்கை வைக்கின்றனர். அல்லாஹ்வும் அவர்களது நம்பிக்கையை முழுமை செய்து விடுகிறான். எவ்வாறு அல்லாஹ் தேவையை நிறைவேற்று விட்டான் என்று அவர்களுக்கும் வியப்பு ஏற்படுகின்றது. ஆனால் நிபந்தனை என்னவென்றால், நல்ல நிய்யத்தோடு இறைவனின் விருப்பத்தை பெறுவதற்காகத் தியாகம் செய்ய வேண்டும். அதற்காக ஏனைய கட்டளைகளையும் நன்மைகளையும் கூட செயலாற்ற வேண்டும். பொருள் மட்டும் கொடுத்துவிட்டு, நான் மிக அதிகமாகத் தியாகம் செய்து விட்டேன்; மற்ற கடமைகளையும் நிறைவேற்றி விட்டேன் என்று நினைத்துக் கொள்வது கூடாது. மற்ற நன்மைகளை செயலாற்றுவதும் அவசியமாகும்.

ஒரு வியாபாரியைப் போன்று, அதற்கான இலாபத்தைப் பெற வேண்டும். அல்லாஹ்வின் வழியில் கொடுக்கலாம் இலாபம் கிடைத்து விடும் என்ற சிந்தனையோடு மட்டும் பொருள் செலவு செய்யக்கூடாது. நான் தற்போது சில மக்களின் சொந்த நிகழ்வுகளை எடுத்துரைக்கிறேன். அவர்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையிலிருந்து அருள் பெற்றுள்ளார்கள்.

பெரும்பாலும் எத்தகைய சம்பவங்கள் உள்ளனவென்றால், அவற்றில் அவர்கள் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காக தியாகம் செய்தனர். வியத்தகு முறையில் அல்லாஹ் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற மட்டுமில்லை. மாறாக அதிகரித்துக் கொடுத்தான். பலர் எத்தகையவர்கள் எனில், அவர்கள் தம்முடைய மற்றும் பிள்ளைகளுடைய பசியை போக்குவதை பொருட்படுத்துவதில்லை. ஆனால் சில நிமிடங்களுக்குள்ளேயே அவர்களிடமிருந்ததை விட அதிகமாக அவர்களின் பசியை அகற்றும் வழி வகையை அல்லாஹ் ஏற்படுத்தி விட்டான். அவர்களிடம் இருந்ததை விட அதிகமாக வழங்கி விட்டான். இவ்வாறு இந்த விஷயம் அவர்களின் ஈமானில் மேற்கொண்டு உறுதி ஏற்பட வழியாகி விட்டது. ஆக இவர்களே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடிய அந்த மக்களாவர். அவர்களின் எண்ணற்ற உதாரணங்கள் இன்று நமக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்திலேயே தென்படுகின்றன.

கினி கினாக்கரியுடைய சதர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் என்னுடைய கடந்த வருட வக்ஃபே ஜதீத் குத்பாவை பள்ளிவாசலில் வாசித்துக் காட்டினார்கள். அதில் நான் பொருட் தியாகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்திருந்தேன். மேலும் அது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துரைத்திருந்தேன். அவற்றில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்கள் இறைவனை அடைவதற்கான ஐந்து வழிமுறைகளில் ஒன்றாக, ஜிஹாத் ஃபில் மால் அதாவது பொருளைக் கொண்டு போர் புரிதலை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் ஓர் உள்ளத்தில் இரு நேசங்கள் ஒன்றிணைய முடியாது. அதாவது பொருளின் மீதான நேசமும் இறைவன் மீதான நேசமும் (ஒன்றிணைய முடியாது) என்று அன்னார் கூறியிருந்தார்கள்.

இது மட்டுமின்றி நான் பொதுவாக எடுத்துரைக்கக்கூடிய பொருள் தியாகம் தொடர்பான ஈமானை வலுவூட்டக்கூடிய சில சம்பவங்களையும் நான் அந்த குத்பாவில் எடுத்துரைத்திருந்தேன். முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு வறியவரான ஒரு கலப்பற்ற அஹ்மதி மூஸா கபா சாஹிப் தமது பாக்கெட்டில் இருந்த பணத்தையெல்லாம் மிகவும் கலப்பற்ற முறையில் வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டார். ஆனால் அவர் இதற்கு முன்னரே சந்தாவை செலுத்திவிட்டிருந்தார். எவ்வளவு தொகை இருக்கிறது என்று கேட்கப்பட்டபோது, பாக்கெட்டில் இருந்ததை நான் எடுத்துக் கொடுத்து விட்டேன். இப்பொழுது நீங்களே எண்ணிக் கொள்ளுங்கள். நானோ அல்லாஹ்வின் நேசத்தைப் பொறுவதற்காக கொடுத்தேன். எண்ணிக் கொடுக்கவில்லை என்று அவர் கூறினார். எண்ணிப் பார்க்கப்பட்டபோது 85,000 பிரான்க் தொகை இருந்தது. அவரிடம், இதிலிருந்து சிறிது பணத்தை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள்

வீட்டிற்கும் செல்ல வேண்டும். நீங்கள் பாக்கெட்டிலிருந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து விட்டீர்களே? என்று கூறப்பட்டது. அப்போது அவர், நீங்கள் கேட்கவில்லையா? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஓர் உள்ளத்தில் இரு நேசங்கள் ஒன்றிணைய முடியாது என்று கூறியுள்ளார்கள். எனவே இன்று என்னை அல்லாஹ்வின் மீதான நேசத்தின் ஆதரவில் வாழவிடுங்கள் என்று கூறிவிட்டு மகிழ்ச்சியோடு நடந்தே தமது வீட்டிற்குச் சென்று விட்டார்.

ஆக இவையே அந்தக் காட்சிகளாகும். அவற்றைப் பார்த்து முபல்லிக் சாஹிப் அவர்களும், உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்வதால் நிரம்பி விடுகிறது என்று எழுதியுள்ளார்கள். எத்தகைய கலப்பற்ற ஜமாஅத்தை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

மக்கள் குத்பாக்களைக் கேட்கின்றனர். கேட்டுவிட்டு, நாங்கள் கேட்டுவிட்டோம் என்று கூறுகின்றனர். ஆனால் இரு நேசங்கள் உள்ளத்தில் இருக்க முடியாது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய விஷயத்தை இந்த அளவு ஆழமாகக் குறிப்பெடுத்து, பிறகு தனது பாக்கெட்டில் உள்ள பணத்தை தான் நேசிப்பது என்பது முடியாது என்று கூறி உடனடியாக அதன்படி அவர் செயல்பட்டும் விட்டார். மக்கள் தங்களுக்குப் புரிவதில்லை என்று கூறுகின்றனர். இதுவே ஆழமான ஒரு விஷயத்தைக் கேட்டு அதன்படி செயல்படுவதற்கான உதாரணமாகும். தியாகத்தின் எத்தகைய வினோதமான காட்சிகள்.

ஒவ்வொரு நிலையிலும் அல்லாஹ்வோடு விசுவாசத்திற்கான உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் எந்த முறையீட்டையும் செய்யாமலிருப்பதும் கூட பைஅத் நிபந்தனைகளுக்கு ஏற்ப இருக்கும் விஷயமாகும். செலுத்திய பிறகு, தியாகம் செய்த பிறகு அதனால் மகிழ்ச்சி ஏற்பட்டது. விசுவாசத்தோடு தியாகம் செய்ய ஆயத்தமாக உள்ளனர். நமது எதிரிகள், நாங்கள் ஜமாஅத்தின் பெயரை உலகிலிருந்து அழித்து விடுவோம் என்று கூறுகின்றனர். அல்லாஹ்வோடு இத்தகைய அன்பு கொண்டிருக்கக் கூடியவர்களை, விசுவாசம் கொண்டிருக்கக் கூடியவர்களை அழிக்கக் கூடியவர் யார்? பிறகு இத்தகைய அன்பு கொண்டிருக்கக் கூடியவர்களை அல்லாஹ் தன்னோடு இணைத்துக் கொள்கின்றான். எதிரியின் மண் கூட தென்படுவதில்லை.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஃபிரான்ஸுடைய ஒரு பெண்மணி டெனீவா சாஹிபா இருக்கின்றார். அவர் சில காலங்களுக்கு முன்பு பைஅத் செய்தார். குடும்பத்தோடும் அவருக்கு அதிக சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. அவர் கூறுகின்றார்: நான் பொருள் தியாகத்தில், அது வக்ஃபே ஜதீத் ஆகட்டும்; தஹ்ரீகே ஜதீத் ஆகட்டும், பள்ளி ஃபண்ட் ஆகட்டும், எப்பொழுதும் பங்கு பெற முயற்சி செய்துள்ளேன். சந்தாவின் அருட்களை எனது கண்களால் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வருடம் நான் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்திய பிறகு நிலைமைகள் எவ்வாறு இருந்தனவென்றால், நான் நல்ல வேலைக்காக ஒரு நீண்ட காலமாக முயற்சி செய்து வந்தேன். ஆனால் எந்த வேலையும் கிடைக்கவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: எந்நாளில் நான் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தினேனோ அன்று பத்து நிமிடங்களிலேயே ஒரு மிகப்பெரிய கம்பெனி தரப்பிலிருந்து எனக்குப் பணி கிடைத்திருப்பதாக ஃபோன் மூலமாக தகவல் கிடைத்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சந்தாக்கள் அனைத்தையும் செலுத்திய உடனேயே குறிப்பாக வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்திய உடனேயே பணி கிடைப்பது என்பது நிச்சயமாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்து எனக்கு ஓர் அடையாளமாகும்.

காஸ்கஸ்த்தான் உடைய நமது ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: உள்ளூர் முபல்லிக் தஸ்லாம் சாஹிப் அவர்களின் துணைவியார் சில வருடங்கள் முன்பு பைஅத் செய்தார்கள். இம்முறை தமது பிறந்த நாள் அன்று 7000 தீங்கே (இது உள்ளூர் கரன்சி ஆகும்) தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவில் பாதி பாதியாகக் கொடுத்துவிட்டார்கள். இந்தத் தொகையை செலுத்திய ஒரு வாரத்திலேயே எனக்கு 70000 தீங்கே பணம் கிடைத்து விட்டது. அதை நான் எதிர்பார்த்திருக்கவும் இல்லை. அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்ததனால், அவன் பத்து மடங்கு அதிகரித்துத் திருப்பித் தந்து விட்டான்.

சில மக்கள் ஏன் எங்களுக்கு இவ்வாறு நடப்பதில்லை? எங்களுக்கு இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுவதில்லையே? என்று கேட்கின்றனர். அவர்கள் பாவமன்னிப்பும் கோர வேண்டும். அவர்கள் இந்தத் தியாகத்தை செய்த தருணத்தில், அவர்களுடைய நிய்யத் அல்லாஹ்வுக்காக மட்டும் தியாகம் செய்ய வேண்டும் என்று இருந்ததா? என தமது உள்ளங்களை அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இருந்ததென்றால், பிறகு முறையீடும் உருவாக முடியாது. ஆக அல்லாஹ் தியாகம் செய்ய நல்வாய்ப்பு வழங்கியுள்ளான் என்று மகிழ்ச்சியடைய வேண்டும். அல்லாஹ் கொடுக்க வேண்டும். எவ்வாறு கொடுக்க வேண்டுமோ அவன் கொடுத்து விடுவான். இருக்கலாம், இன்று இல்லையேல் நாளை கொடுத்து விடுவான். ஆனால் எவர்களுடைய நிய்யத்தே இதுவாக இருக்கிறதோ அவர்களுக்குப் பிறகு முறையீடுகளும் ஏற்படுகின்றன. சில உள்ளங்கள் இவ்வாறாக உள்ளன. பிறகு இத்தகைய மக்களுக்குத் தொழுகைகளும் சுமையாகத் தோன்றுகின்றன.

மாஸ்கோவின் ஒரு தோழர் அப்துர் ரஹீம் சாஹிப் கூறுகின்றார்கள்: வேலை விஷயத்தில் எனது பாக்கியம் எப்போதும் மோசமாக இருந்துள்ளது. எங்கு வேலை கிடைத்தாலும், அங்கு சம்பளம் எவ்வளவு குறைவாக இருக்கும் என்றால், முழு குடும்பத்திற்கான செலவு கடினமாகி விடும். ஒரு முறை ஒரு மாதச் சம்பளமே கொடுக்கப்படவில்லை. பிறகு அல்லாஹ் எந்த அளவு அருள் புரிந்தான் எனில் எனது சம்பளம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. இதன் மூலம் சந்தாக்களை முறையாக செலுத்த வேண்டும் என்று இறைவன் புறமிருந்து எனக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதை நான் புரிந்து கொண்டேன்.

ஆக எத்தனை சந்தாக்கள் இருந்தனவோ அத்தனை சந்தாக்களையும் நான் முறையாக செலுத்த ஆரம்பித்து விட்டேன். இவ்வாறு செலுத்தியதன் விளைவாக அல்லாஹ் மேற்கொண்டு அருள் புரிந்தான். எனக்கு எத்தகைய ஒரு வேலைக்கான வாய்ப்பு வந்ததென்றால், அதற்காக நான் இரண்டு ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருந்தேன். அல்லாஹ்வின் அருளால் இப்பொழுது எனக்கு வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்துவதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. மேலும் சந்தா செலுத்துவதில் நிரந்தரத் தன்மையின் காரணமாக அல்லாஹ் மனிதனின் வருமானத்தை அதிகரித்துக் கொண்டே செல்கின்றான். வருமானத்திற்கான நிரந்த ஏற்பாட்டையும் செய்து விடுகின்றான் என்ற விஷயம் எனக்கு புரிந்து விட்டது. நான் அல்லாஹ்வுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கூடியவனாக உள்ளேன். அவன் எனக்கு சந்தாக்களை செலுத்தக்கூடியவர்களில் இணைவதற்கும், ஜமாஅத் சந்தாக்களை செலுத்துவதற்கும் நல்வாய்ப்பு வழங்கியுள்ளான்.

சீராலியோனிலிருந்து வாட்டர் லோ மண்டலத்தின் முபல்லிக் இஃப்திகார் சாஹிப் எழுதுகின்றர்ர்கள்: வக்ஃபே ஜதீத் சந்தா வசூலுக்காக பல்வேறு ஜமாஅத்துகளுக்கு சுற்றுப் பயணம் சென்றோம். ஜமாஅத் மக்களிடம், உங்களுக்கு சந்தாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதில் எங்கள் தரப்பிலிருந்து சோம்பல் ஏற்பட்டுள்ளது என்று கூறினோம்.

நான் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை அறிவிக்கும்போது, சீராலியோனில் அதிக அளவு வசதி உள்ளது. ஆற்றல் உள்ளது. அவர்கள் நாடினால் தமது சந்தாக்களில் சிறப்பை ஏற்படுத்த முடியும் என்று அறிவித்திருந்தேன். ஆக அவர்கள் இந்தத் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு ஜமாஅத்துகளுக்கு சென்றார்கள். மேலும் சீராலியோன் மிகப்பெரிய மற்றும் பழைய ஜமாஅத் ஆகும். ஜமாஅத் மக்கள் பொருள் தியாகம் செய்ய ஆயத்தமாக உள்ளனர். சோம்பல் இருக்கிறது என்றால், பொறுப்பாளர்கள் தரப்பிலிருந்து இருக்கிறது என்பது காலத்தின் கலீஃபா அவர்களின் தூதுச் செய்தியாகும் என்று அவர்கள் கூறினர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்தத் தூதுச் செய்தியைக் கேட்டதும் ஜமாஅத் மக்களிடம் ஓர் உத்வேகமும் எழுச்சியும் ஏற்பட்டு விட்டது. அவர்கள் வக்ஃபே ஜதீத் சந்தாவை மட்டும் செலுத்தி விடவில்லை. மாறாக, ஏனைய சந்தாக்களையும் அதிகரித்து செலுத்தினார்கள்.

லியூடன் எனும் ஓர் இடமிருக்கிறது. அங்கு 18 வீடுகளில் தொடர்பு கொள்ளப்பட்டது. அதன் விளைவாக 13 இலட்சம் லியோன் ஒரே நாளில் வசூலானது. இரண்டு அஹ்மதி பள்ளி மாணவர்கள் ஒரே நாளில் 3 இலட்சம் லியோன் வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டனர். மேற்கொண்டு 2 இலட்சம் லியோன் கூடுதலாக பின்னர் செலுத்தி விட்டனர்.

லியூடனில் ஒரு பெண் பிள்ளை முஸ்லிமா கோஃபா என்பவர் 50000 லியோன் செலுத்தி விட்டு, கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் துஆவுக்காகக் கூறுங்கள் என்றார். முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்கள்: ஐந்து மாணவர்கள் என்னிடம், வேலை செய்து கிடைத்த ஊதியம் 50000 லியோனை வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டதாக கூறினார்கள்.

ஆக இவர்களே காலத்தின் கலீஃபாவின் கட்டளைக்கு செவிசாய்க்கக்கூடிய அந்த மக்களாவர். ஒருபோதும் நேரில் சந்திக்கவில்லை.

எதிரெதிரே அமரவில்லை. ஆனால் அவர்களின் உள்ளத்தில் கிலாஃபத்தோடு அன்பு மற்றும் அதன் மீதான கண்ணியம் இருக்கிறது. எனவே பிறகு அல்லாஹ்வுக்காக எல்லாத் தியாகங்களுக்காக ஆயத்தமாகி விடுகின்றனர்.

பிறகு இதே அன்பிற்கான லியூடன் ஜமாஅத்துடைய மற்றோர் உதரணமும் உள்ளது. அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஏஸ்பாவின் வீட்டிற்குச் சென்று சந்தா கொடுக்குமாறு கூறினேன். மேலும் சிராலியோனில் ஜமாஅத் மக்கள் தியாகங்கள் செய்ய ஆயத்தமாக உள்ளனர் எனும் குத்பா மேற்கோளை நான் வாசித்துக் காட்டினேன். அப்பொழுது அவர்களின் துணைவியார் மிகவும் உணர்வு கொண்டெழுந்தார்கள். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முற்றிலும் சரியாகக் கூறியுள்ளார்கள். ஆனால் நிர்பந்தம் என்னவென்றால், இன்று எங்கள் வீட்டில் எதுவுமே இல்லை என்று அன்னார் கூறினார்கள்.

அன்னாரர் அமர்ந்துதான் இருந்தார்கள். அப்பொழுது எங்கிருந்தோ எதிர்பாராத விதமாக ஒரு தொகை வந்து விட்டது. அதை அவர்கள் அந்தத் தருணமே எங்களுக்கு சந்தா ரஸீது போடுங்கள் என்று கூறி அவர்களின் தோழரான பொருளாளரிடம் கொடுத்து விட்டார்கள். எண்ணிப் பார்த்தபோது இரண்டு இலட்சம் லியோன் இருப்பது தெரிய வந்தது. அவை அனைத்தையும் அவர்கள் சந்தாவில் செலுத்தி விட்டார்கள். அவ்வாறு செலுத்தியதால் மிகவும் மன நின்மமதியும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

இத்தகைய தவறான நேரத்தில் நீங்கள் வந்து விட்டீர்கள். இப்பொழுது எங்களுக்கே தேவை உள்ளது. எங்களுக்கு வந்த பணத்தையும் நீங்கள் எடுத்து சென்று விட்டீர்களே என்று எந்த முறையீடும் இருக்கவில்லை.

ஆக அவர்கள் கூறுகிறார்கள்: நான் அவர்களிடம், இந்தத் தொகையில் வீட்டுக்கு உணவுக்காகவும் சிறிது வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அவர்கள் கூறினார்கள்: இப்பொழுது ஒன்றுமில்லை. வந்த தொகையை சந்தாவில் செலுத்தி விட்டோம். இப்பொழுது எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என்று கூறினார்கள். ஆனால் சிறிது நேரம் கூட அல்லாஹ்வும் கடன் வைக்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: சிறிது நேரத்திலேயே அவர்களுக்கு எங்கிருந்தோ வேறு ஒரு தொகையும் வந்து விடட்து. அது போதுமான தொகையாக இருந்தது. பிறகு அவர்களின் உணவுப் பொருட்களுக்கான ஏற்பாடும் ஆகிவிட்டது.

கர்கிஸ்தானுடைய முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு கலப்பற்ற கர்கிஸ் அஹ்மதி கூவ்வத் சாஹிப் பஷ்க்கீக்கில் வசிக்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள்: நான் வக்ஃபே ஜதீத் சந்தாவுக்காக ஆயிரம் ஸூம் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தேன். ஸூம் கர்கஸ் கரன்சியாகும். நிதியாண்டு முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எங்கள் ஜமாஅத்தின் சதர் சாஹிப் குத்பாவில் வக்ஃபே ஜதீத் குறித்து ஒளியிட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: அவர்கள் குத்பாவில் எங்கள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒரு முந்தைய குத்பாவில் உள்ள சம்பவங்களை வாசித்துக் காட்டினர்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் வழங்கியிருந்த வாக்குறுதி ஆயிரம் ஸூம்மில், அன்று அச்சமயம் வரை இருநூறு ஸூம் மட்டுமே செலுத்தியிருந்தேன். முழுமையாக செலுத்துவதற்கு அது வரை நல்வாய்ப்பு கிடைக்கவில்லை.

எனது ஒரு நோய்வாய்ப்பட்ட சகோதரி இருக்கின்றார். அரசாங்கம் அவருக்கு ஒவ்வொரு மாதமும் நான்காயிரம் ஸூம் வழங்குகிறது. அன்று ஜுமுஆவிற்குப் பிறகு நான் எனது சகோதரியின் பென்ஷன் வாங்க சென்றேன். நான் ஏடிஎம் மெஷினில் கார்டை போட்டபோது, அக்கவுண்டில் 10000 ஸூம் இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்பு எனது தாயார் அரசாங்கத்திற்கு, இவ்வாறு எங்கள் செலவுகளை மேற்கொள்ள முடியவில்லை; எனவே அலோவன்ஸ் அதிகரிக்கவும் என்று ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். இது அரசாங்கத்திடமிருந்து அந்தத் தொகை தான் வந்துள்ளது என்று நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் கூறுகிறார்கள்: இன்று காலை டிசம்பர் 29 அன்று அரசாங்கத்திடமிருந்து, நாங்கள் வாக்குறுதிக்கு ஏற்ப உங்களுக்கு 5000 ஸூம் வழங்குவோம் என்று ஃபோன் வந்தது. இவ்வாறு மேற்கொண்டு 5000 ஸூம்மும் கிடைத்து விட்டது.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் சந்தாவும் கொடுத்து விட்டேன். நாங்கள் முதலில் செலவழித்துவிட்டிருந்ததை அல்லது செலவானதை இதிலிருந்து ஈடுகட்டி விட்டோம்.

ஆக அவர்கள், இது நான் கொடுத்த சந்தாவின் பரக்கத்தின் உடனடி விளைவாகும். அந்தப் பணம், முதலில் வந்த பணம் எங்கிருந்து வந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எவ்வாறிருப்பினும் எங்கள் அக்கவுண்டில் வந்தது. இது உங்கள் பணம்தான்; இதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என வங்கி கூறியது என்று கூறுகிறார்கள்.

ஆக இந்தத் தியாகங்கள் பிறகு ஈமானில் முன்னேற்றத்திற்கு காரணமாகின்றன.

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஸஞ்சிபார் ஜமாஅத்தைச் சேர்ந்த கைர் ரஷீதி சாஹிப் அவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆண்டு இறுதியில் அவர்களுக்கு வக்ஃபே ஜதீத் குறித்து நினைவூட்டப்பட்டபோது, அவர்கள் எழுதுகிறார்கள்: இந்த நினைவூட்டலின்போது எனக்கு எந்த வேலையும் இருக்கவில்லை. என்னிடம் எந்தத் தொகையும் இருக்கவில்லை. ஆனால் நான் முரப்பி சாஹிப் அவர்களிடம், நீங்கள் என் பெயரை முழுமையாக செலுத்தியவர்களின் பட்டியலில் இணைத்து விடுங்கள். அல்லாஹ் தானே ஏற்பாடு செய்து விடுவான் என்று கேட்டுக் கொண்டேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: இரண்டு நாட்கள் கழிந்திருக்கும்; எனக்கு டிரைவர் வேலை கிடைத்து விட்டது. முதல் நாளே வந்த வருமானத்திலிருந்து, நான் சுலபமாக என் சார்பாகவும் எனது பிள்ளைகள் சார்பாகவும் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தி விட்டேன்.

ஆக அவர்கள் கூறுகிறார்கள்: சந்தா செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக, எனது நிரந்தர வருமானத்திற்கான ஏற்பாடு ஆகிவிட்டது. பிறகு பாருங்கள். எத்தகைய விஷயங்கள் எனில், இந்த விஷயங்களால் எங்கள் ஈமானும் உறுதி அடைகிறது.

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்களே எழுதுகின்றார்கள்: அரீங்கார் மண்டலத்தைச் சேர்ந்த தாஹா சாஹிப் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறினார்கள்: இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக அசாதாரணமான பரக்கத்துகளைக் காண வாய்ப்பு கிடைத்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: வக்ஃபே ஜதீத் சந்தா வாக்குறுதி ஏறத்தாழ 6 இலட்சம் ஷில்லிங் இருந்தது. நவம்பரில் பொருளாதார நெருக்கடியைப் பார்த்தவாறு அவர்கள், ஒட்டு மொத்தமாக நாடு மற்றும் தொழில் நிலைகள் மிகவும் மோசமாக உள்ளன. எனவே அல்லாஹ் வழங்கியுள்ள நல்வாய்ப்பால் நான் வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை முழுமைபடுத்துவதற்ககாக துஆ செய்யுங்கள் என்று எனக்குக் கடிதம் எழுதினார்கள்.

இப்பொழுது எனக்குக் கடிதம் எழுதும் இவர்கள் சொந்தத் தேவைகளுக்காகவே மட்டும் எழுதவில்லை. நாங்கள் எங்கள் சந்தாவை செலுத்துவதற்காக துஆ செய்யுங்கள் என்ற கவலையுடன் எழுதுகின்றனர். பின்னால் சில சம்பவங்கள் வரும். மக்களோ தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பகரமாக, நாங்கள் சந்தாக்களை செலுத்த வேண்டும்ட என்று தொழுகைகளையும் தஹஜ்ஜுத்தையும் நிறைவேற்றுகின்றார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: இப்பொழுது கடிதம் எழுதிதான் இருந்தேன். இன்ஷா அல்லாஹ் ஏதாவது வழி ஏற்பட்டு விடும் என்று உள்ளத்தில் நிம்மதி ஏற்பட்டது.

இப்பொழுது கடிதம் எழுதி 24 மணி நேரமே கழிந்திருக்கும். ஏதோ ஒரு ரொஃபரென்ஸிலிருந்து ஒரு நண்பர் தமது தொழில் தொடர்பாக ஆலோசனைக்காக என்னிடம் வந்தார். அவரை சந்தித்த போது, 15 வருடங்களுக்கு முன்பு நாங்கள் இருவரும் வகுப்புத் தோழர்களாக இருந்தது தெரிய வந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: அவருடைய தொழில் தொடர்பாக என்னோடு உரையாடல் நடந்தது. பிறகு அப்பொழுது அவர் மூலமாக எனக்கு ஒரு காண்ட்ராக்ட் கிடைத்து விட்டது. அது 6 மில்லியன் (60 இலட்சம்) ஷில்லிங் காண்ட்ராக்டாக இருந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் எனது வாக்குறுதியின் தொகையை விட பன் மடங்கு அதிகமாக, பத்து மடங்கு அதிகரித்து ஏற்பாடு செய்து விட்டான். 6 இலட்சத்தை 6 மில்லியனாக (60 இலட்சமாக) ஆக்கிவிட்டான். அட்வான்ஸ் கிடைத்த உடனேயே எல்லாவற்றுக்கும் முதலாக நான் வக்ஃபே

### திருக்குர்ஆனிலிருந்து...

நீர் சிறிது காலம் அவர்களை விட்டு விலகி விடுவீராக. மேலும் நீர் நன்கு பார்த்துக் கொண்டிருப்பீராக. நிச்சயமாக அவர்களும் (தங்கள் முடிவைக்) கண்டுகொள்வர். (37:179,180)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

ஜதீத் வாக்குறுதியை முழுமைப்படுத்தினேன்.

ஸஞ்ச்பாரைச் சேர்ந்த ஒரு புதிதாக பைஅத செய்த நண்பர் ஜுமுஆ சாஹிப் அவர்கள் காய்கறி சந்தையில் தொழிலாளியாக பணிபுரிகிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

வக்ஃபே ஜதீத் சந்தாவின் வாக்குறுதியை செலுத்துவது தொடர்பாக வலியுறுத்தப்பட்டபோது அந்த நாட்களில் பொருட்களை கொண்டு வரக்கூடிய போக்குவரத்து தடைபட்டு விட்டிருந்தது.

வாகனங்களில் பொருட்களை ஏற்றிச் சென்று இறக்கி வரும் பணியை செய்கிறார்கள்.

பொருளாதார நிலை நெருக்கடியாக இருந்தது. நான் ஏற்கனவே கூறினேன் அல்லவா? இப்பொழுது இவர் தொழிலாளி மனிதர். ஏழை மனிதர். எனது தேவைகள் நிறைவேறி விட வேண்டும்; எனது வயிறு நிரம்புவதற்கான வழி ஏற்பட்டு விட வேண்டும் என்று துஆ செய்யவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் சில நாட்கள் தஹஜ்ஜுதில் அல்லாஹ்விடம் சந்தாக்கள் செலுத்துவதற்காக குறிப்பாக துஆ செய்தேன்.

துஆ செய்தார்கள் என்றால், தஹஜ்ஜுதில் எழுந்து துஆ செய்தார்கள் என்றால், அல்லாஹ் நான் பொருட் தியாகத்தில் பின்தங்கி விடாதிருகக நல்வாய்ப்பு வழங்குவானாக என்பதற்காக மட்டும் துஆ செய்தார்கள். ஆக வக்ஃபே ஜதீதின் நிதியாண்டு முடிவடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு முடங்கி இருந்த தொழில் மீண்டும் ஆரம்பித்து விட்டது. மேலும் அவர்களுக்கு ஏறத்தாழ 3 இலட்சம் ஷில்லிங் வருமானம் வந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: அதன் மூலம் எனக்கு என்னுடைய மற்றும் எனது பிள்ளைகளுடைய சந்தா செலுத்துவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது.

எங்கள் வாழ்வைக் கழிப்பதற்குத் தொகை கிடைத்து விட்டது என்று கூறவில்லை. மாறாக எனது மற்றும் என்னுடைய பிள்ளைகளுடைய சந்தா செலுத்தப்பட்டு விட்டது என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் பைஅத் செய்ததிலிருந்து சந்தாக்களை செலுத்தியதன் காரணமாக அல்லாஹ் எனது செல்வத்தில் அளவு கடந்த பரக்கத்தை ஏற்படுத்தினான்.

ஆக இவர்களே அந்த மக்களாவர். அவர்களுக்குக் கவலை இருக்கிறது என்றால், சந்தாக்களை செலுத்துவற்காக இருக்கிறது. மேலும் தஹஜ்ஜுதில் நான் கூறியதுபோன்று குறிப்பாக அழுது அழுது துஆ செய்கிறார்கள் என்றால் அல்லாஹ் சந்தா செலுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக துஆ செய்கிறார்கள்.

ஓர் உலகவாதி மனிதர் இந்த விஷயங்கைளைக் கேட்டு விட்டு, இது பைத்தியக்காரத்தனம் என்று கூறலாம். ஆனால் இதே உலகவாதிகளின் பார்வையில் முட்டாள்களாக இருக்கக்கூடிய இந்த மக்களையே அல்லாஹ் நேசிக்கிறான். பிறகு இவர்களின் தேவைகளைத் தானே பூர்த்தி செய்கிறான்.

அறிக்கைகளில் மிகவும் வினோதமான சம்பவங்கள் கிடைக்கின்றன.

கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நார்த் பேங்க் மண்டலத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த கடைக்காரர் இப்ராஹீம் சாஹிப் மிகவும் வெற்றிகரமான வணிகராகத் திகழ்ந்தார்கள். மக்கள் தங்கள் அமானிதங்கள் முதலியவற்றை அவர்களிடம் வைத்து வந்தார்கள். அப்பொழுது இவர்கள் அஹ்மதி அல்லாதவராக இருந்தார்கள். சில காரணங்களின் அடிப்படையில், திடீரென திவாலாகி விட்டார்கள். மேலும் இவர்கள் தமது தொழிலைக் காப்பாற்றுவதற்காக மக்களின் அமானிதங்களையும் செலவு செய்து விட்டார்கள்.

அந்த அமானிதங்களையும் திருப்பிக் கொடுக்க முடியாது என்று இவர்களுக்கு அபாயம் ஏற்பட்டபோது, தமது தாய் நாடான கினிகினாகிரிக்கு சென்று விட்டார்கள். நாட்டை விட்டு ஓடி விட்டார்கள். மூன்று வருடங்கள் வரை கினிகினாகிரியிலேயே இருந்தார்கள். பிறகு அவர்கள், திரும்பி செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்கள். உள்ளத்தில் நன்மை இருந்தது. திரும்பிச் சென்று நிலைமைகளை எதிர் கொள்ளலாம். கடன்களை எவ்வாறாவது மக்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்றே தீர்மானித்தார்கள்.

ஆக இவர்கள் கிராமத் தலைவருக்கும் மாவட்ட அதிகாரிக்கும் ஃபோன் செய்து எனக்கு சந்தர்ப்பம் கொடுங்கள். என்னைத் திரும்பி வரவிடுங்கள். என்னை கைது செய்யாதீர்கள். நான் எல்லாக் கடன்களையும் செலுத்தி விட முயற்சி செய்வேன் என்று கூறி ஒரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள்.

அவர் உழைத்து சம்பாதிக்க வேண்டும். மக்களின் அமானிதங்களை திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய முடியவில்லை என்றால் அவர் சிறைக்கு அனுப்பப்படுவார் என்ற இந்த நிபந்தனையின் அடிப்படையில் அவர் திரும்பி வர தலைவர் அனுமதி அளித்தார்.

அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் வந்து நான்கு மாதங்கள் ஆகியிருந்த நிலையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி அவரை சென்றடைந்தது. அதைக் கேட்டு அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். முறையாக சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். பொருட் தியாகங்களிலும் பங்கு பெற ஆரம்பித்து விட்டார்கள். எவ்வளவு வருமானம் வந்ததோ அதிலிருந்து ஏதாவது பங்களித்து வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால், சந்தா செலுத்தியதால், அவர்களின் பணியில் எந்த அளவு பரக்கத் ஏற்பட்டதென்றால், இரு வருட காலத்தில் அவர்கள் 2 இலட்சம் டலாசியாக இருந்த தமது அனைத்து கடன்களை மட்டும் செலுத்தி விடவில்லை. மாறாக, தமது வீட்டையும் கட்டி விட்டார்கள். கடனையும் மீண்டும் நிலை நிறுத்தி விட்டார்கள்.

இப்பொழுது அவர்களின் தொழில் முன்னரைவிட அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இவையனைத்தும் சந்தாவின் பரக்கத்தால் ஏற்பட்டது என்று அவர்கள் சுயமே கூறுகிறார்கள்.

ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் ஒரு லஜ்னா உறுப்பினர் கூறுகிறார்கள்: நாங்கள் புதிய வீட்டிற்கு மாறியபோது, எங்களுடைய பொருளாதார நிலைமை சரியாக இருக்கவில்லை. வீட்டு வாடகையும் அதிகமாக இருந்தது. தேவையான பொருட்களை வாங்கும் அளவு பணம் என்னிடம் இருக்கவில்லை. மறுபுறம் சந்தாவின் ஆண்டும் முடிவடைந்து கொண்டிருந்தது. நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு சந்தா செலுத்தி விட்டேன்.

உலகவாதிகளின் நாட்டில் வசிக்கக்கூடிய பெண்மணி. ஏதோ ஏழை நாட்டில் இருந்தவர் அல்ல. அல்லாஹ்வே! யாருடைய தேவை உடையவராகவும் இருக்கக்கூடாது. நீயே எனது தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று துஆ செய்தார்கள்.

அந்தப் பெண்மணி கூறுகிறார்கள்: அதே நாள் மாலையில் எனது கணவர் என்னிடம் கொஞ்சம் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து, எனக்கு எனது அதிகாரியிடமிருந்து இந்த மிகையூதியம் (போனஸ்) கிடைத்தது. அனைத்து ஊழியர்களிலும் எனக்கு மட்டுமே இது கிடைத்தது. வேறு யாருக்கும் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். அது எனது சந்தா தொகையை விட இரட்டிப்புத் தொகையாக இருந்தது. அல்லாஹ்வின் அருளும் கருணையும் எந்த அளவு இருந்ததென்றால், நான் வியந்து போனேன். அல்லாஹ் தனக்காக தியாகம் செய்தவர்களை ஒருபோதும் ஆதரவற்றவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் விடுவதில்லை என்று எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது.

இந்தியாவிலிருந்து கமருத்தீன் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: இவர்கள் இன்ஸ்பெக்டர் ஆவார்கள். இவர்கள் எழுதுகிறார்கள்: நிதியாண்டின் இறுதியில் வக்ஃபே ஜதீத் நாஸிம் சாஹிப் அவர்களுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கோழிக்கோடு ஜமாஅத்தை அடைந்தேன். அப்பொழுது ஓர் அஹ்மதி ஹனீஃப் சாஹிப் வீட்டிற்கும் சென்றோம். அவர்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு பைஅத் செய்தார்கள். சாதாரண தொழில் செய்து வாழ்க்கை நடத்துகிறன்றார்கள். அவர்களுடைய வீட்டை அடைந்தபோது, அவர்களின் பத்து வயது மகன் முத்லால் அலி தன்னுடைய உண்டியலை எடுத்துக் கொண்டு வந்தான். வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தியவாறு, அவன் இந்தச் சந்தாவை வக்ஃபே ஜதீதுக்காக ஆண்டு முழுவதும் சேர்த்து வைத்ததாகக் கூறினான். அந்த உண்டியலை திறந்தபோது, அதில் பெரும் தொகை இருந்தது.

நாஸிம் சாஹிப் அவர்கள் அந்த சிறுவனிடம், பொதுவாக, பிள்ளைகள் தமக்குப் பிடித்த பொருட்களை வாங்குவதற்காக பணம் சேர்ப்பார்கள். நீ ஏன் இதை வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுக்கிறாய்? என்று கேட்டார்கள். அதற்கு அந்த சிறுவன் பதிலளித்தான். அதன் பொருள் இதுவாகும்: அல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களோ இறை வழியில் செலவு செய்யுமாறு கட்டளையிடுகிறார்கள். எனவே நான் இந்தத் தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுக்கிறேன்.

இதுதான் அஹ்மதி பிள்ளைகளின் தர்பிய்யத். எந்த ஜமாஅத்தின் பிள்ளைகளுடைய சிந்தனை இதுவாக இருக்குமோ; இவ்வாறு தர்பிய்யத் இருக்குமோ, அதற்கு இந்த அஹ்மதிய்யத்தின் எதிரிகளால் எவ்வாறு

இழப்பை ஏற்படுத்த முடியும்? எதிரிகள் எவ்வளவு வேண்டுமானாலும் அழுத்தம் கொடுக்கட்டும். ஆனால் இறைவன் இந்த ஜமாஅத்தைத் தனது மார்க்கத்தை உலகில் பரப்புவதற்காக நிலைநாட்டியுள்ளான். எனவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவனே பாதுகாக்கின்றான். மேலும் உதவுகின்றான். ஒரு சந்ததிக்குப் பிறகு அடுத்த சந்ததிகளின் உள்ளத்தில், அதன் மீதான அன்பையும் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான துடிப்பையும் உருவாக்கிக் கொண்டே செல்கிறான்.

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள். அண்டை நாடான மலாவீ மகோச்சி எனும் ஜமாஅத்திலிருந்து முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு தோழர் இப்ராஹீம் சாஹிப் அவர்கள் இறைச்சி வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தாவுக்காக 5800 மலாவீன் கவாச்சா (உள்ளூர் கரன்ஸி) வாக்குறுதியளித்தார்கள். நடப்பு ஆண்டில் சிறிது சிறிதாக கொடுத்து வந்தார்கள். டிசம்பர் வரை கொஞ்சம் பகுதி செலுத்த வேண்டியது எஞ்சியிருந்தது. ஆனால் நாட்டின் நிலைமைகள் காரணமாகத் தொழில் முடங்கி விட்டது. அவர்கள் கடன் வாங்கி வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்காக ஓர் ஆட்டை அதன் இறைச்சியை விற்பதற்காக வாங்கினார்கள். சில நாட்களிலேயே எந்த அளவு பரக்கத் ஏற்பட்டது என்றால் அவர்களின் கடன்கள் அனைத்தும் அடைந்து விட்டன. ஆக ஏழை மக்களும் எந்த அளவு இறை நம்பிக்கை மற்றும் தியாகத்தின் உணர்வுகளால் சந்தா கொடுக்கிறார்கள் பாருங்கள்!

பிறகு அல்லாஹ்வும் அருள் புரிந்து விடுகிறான். அப்பொழுது நாட்டின் நிலைமைகள் இவ்வாறே இருந்தன. இருக்கின்றன. ஆனால் பிறகும் அல்லாஹ் அவர்களின் நிலைமைகளை மாற்றி விட்டான்.

மலவீயின் ஜமாஅத் மாவாலாவுடைய முஅல்லிம் கூறுகிறார்கள்: ஜமாஅத்தில் மடன்பா சாஹிபா எனும் ஒரு விதவைப் பெண்மணி இருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் தமது வசதிக்கேற்ப சந்தா கொடுப்பார்கள். இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தாவுக்காக கொஞ்சம் தொகை வாக்குறுதியளித்தார்கள். நடப்பு வருடத்திலேயே ஏனைய பெண்களுக்கு முன்பே முழுமையாக செலுத்துவதற்கும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

எப்போது முழுமையாக செலுத்தினாரோ அதே நாள் இரவு கனவில், இன்றிலிருந்து உமது பணிகளில் இறைவன் உதவி புரிவான் என்று அவர்களுக்குக் கூறப்படுவதாகப் பார்த்தார்கள். ஆக அடுத் நாள் அவர்கள் முஅல்லிம் சாஹிப் அவர்களிடம் வந்து, வக்ஃபே ஜதீத் சந்தாவில் கூடுதல் தொகை செலுத்தி விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சந்தாவின் பரக்கத்தால் இறைவன் எனது விளைச்சலை மிகவும் அதிகரித்து விடுகிறான். இப்போது இறைவன் எனக்கு உதவி புரிவான் என்று அவனே கூறிவிட்டான்.

ஆக எவ்வாறு அல்லாஹ் சில வேளைகளில் ஈமானில் முன்னேற்றத்திற்கான வழிவகையையும் ஏற்படுத்தி விடுகிறான்.

அல்பேனியாவின் முபல்லிக் சாஹிப் அவர்கள் புதிதாக பைஅத் செய்த ஒருவரைப் பற்றி எழுதுகின்றார்கள்: ஒரு தோழர் மைக்லிஸ் பியா சாஹிப் மூன்று வருடங்களுக்கு முன்பு பைஅத் செய்தார்கள். அவர்கள் ஜமாஅத்தினுடைய தப்லீக் செயலராகவும் உள்ளார்கள். மிகவும் சுறுசுறுப்பான காதிம் ஆவார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு டப்பாவை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள், தாம் ஒரு மாதமாக இந்த டப்பாவை தமது வாகனத்தில் எவ்வளவு மிச்சமாகிக் கொண்டிருக்கிறதோ அதை இதில் ஜமாஅத் சந்தாவுக்காக போட்டு வர வேண்டும் என்ற நிய்யத்தில் வைத்திருந்தார்கள் என்று கூறினார்கள். ஆக முதல் முறை அவர்கள் நிறைந்த டப்பாவைக் கொண்டு வந்தபோது, ஒரு பகுதியைத் தமது நான்கு மாத மகன் பேரூன் பியா சார்பாக தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவில் மற்றும் கட்டாயச் சந்தாக்களில் செலுத்தி விட்டார்கள். இதற்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் பண டப்பாவை நிரப்பிக் கொண்டு வருவார்கள். வக்ஃபே ஜதீத் சந்தர்ப்பத்தில் டிசம்பரின் இறுதியில் கடைசி ஜுமுஆவிலும் அவர்கள் தமது வசதிக்கேற்ப மிகப் பெரிய தொகையைப் பொருட் தியாகம் செய்துள்ளார்கள்.

யூ.கேவிலிருந்து சீம் ஜமாஅத்தினன் சத்ர் சாஹிப் கூறுகிறார்கள்: எங்களுடைய இலக்கில் பெரும் குறை இருந்தது. நான் இதற்காக தஹஜ்ஜுதில் எழுந்து துஆ செய்து வந்தேன். ஒரு நாள் என்னுடைய மனைவி, இன்ன நபர் இருக்கிறார்கள்; இன்ன குடும்பம் உள்ளது. அவர்களிடம் நீங்கள் கூறினால் மேற்கொண்டு உங்களுக்கு செலுத்து விடுவார்கள் என்று கூறினார்கள். ஆக அவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டபோது, அந்தக் குடும்பம், எங்கள் பெயரை வெளியிடக்கூடாது என்று கூறி ஆயிரம் பவுண்ட் செலுத்தி விட்டார்கள். அது மட்டுமின்றி, இன்னோர் ஆயிரம் பவுண்ட் தங்கள் பிள்ளைகள் சார்பாக செலுத்தி விட்டார்கள். பிறகு இது மட்டுமின்றி மேற்கொண்டு உங்களுக்குத் தேவைப்பட்டாலும் சொல்லுங்கள் என்று கூறினார்கள்.

யூ.கேவிலிருந்தே இஸ்லாமாபாதுடைய லஜ்னா வக்ஃபே ஜதீத் செயலர் கூறுகிறார்கள்: பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு முடிந்த பிறகு பிள்ளைகளைப் பராமரிப்பதில் ஈடுபட்டிருந்தேன். இப்பொழுது எனது பிள்ளைகள் 5 மற்றும் 8 வயதை அடைந்து விட்டார்கள். அனைத்து சந்தாக்களும் கணவரின் வருமானம் மூலமாகவே செலுத்தப்பட்டு வந்தன. எனது அக்கவுண்டில் பிள்ளைகளுக்கான Child Benefit தான் வந்து கொண்டிருந்தது. நான் அல்லாஹ்வின் வழியில் எவ்வளவு செலவு செய்தாலும் அதை உண்மையான பொருட் தியாகமாகக் கூற முடியாது என்று நினைத்து வந்தேன்.

ஆக நான் இந்த வருடம் செம்டம்பரில் எனது Personal அக்கவுண்டில் சந்தாக்களுக்காக Standard Order மூலமாக வஸிய்யத், தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்கள் மட்டுமின்றி, எனது தந்தை வழிப் பாட்டி மற்றும் தந்தையின் சகோதரர் சார்பாகவும் சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டேன். உண்மையிலேயே எனது வருமானத்திற்கு ஏற்ப அது உண்மையான தியாகமாக இருக்கும் அளவு மாதாந்திர தவணையை நிர்ணயித்தேன்.

அந்த மாதமே நான் பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில், மேற்கொண்டு பணிபுரிய அனுபவம் கிடைப்பதற்காக ஆசிரியராகப் பணிபுரிய விண்ணப்பித்து விட்டிருந்தேன். ஆனால் வெற்றிக்கு எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: என்று எனது வங்கிக் கணக்கிலிருந்து முதல் சந்தா தொகை செலுத்தப்பட்டதோ, அதற்கு அடுத்த நாள் எனக்கு பள்ளிக்கூடத்திலிருந்து நேர்காணலுக்கான அழைப்பு வந்தது. வங்கிக் கணக்கிலிருந்து இரண்டாவது தொகை செலுத்தப்பட்டபோது எனக்கு துணை ஆசிரியர் பதவிக்குப் பதிலாக பள்ளி நிர்வாகிகள் இன்னொரு முக்கியமான பதவியைக் கொடுத்து விட்டார்கள். அதனால் எனது வருமானம் பத்து மடங்கு அதிகரித்து விட்டது. அதன் மூலம் இது அல்லாஹ்வின் வழியில் பொருட் தியாகம் செய்ததன் விளைவுதான் என்று எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது.

ஜெர்மனியிலிருந்து முபல்லிக் ஃபர்பாத் சாஹிப் எழுதுகிறார்கள்: உள்ளூர் அமாரத் விஸ்பேடன் உடைய ஒரு காதிம் கூறினார்கள்: அவர்கள் தஹ்ரீகே ஜதீத் சந்தா செலுத்தி விட்டிருந்தார்கள். மாறாக, எந்தத் தொகை வக்ஃபே ஜதீதில் செலுத்த வேண்டியிருந்ததோ அதையும் கூடுதல் தொகையாக தஹ்ரீக்கே ஜதீதில் செலுத்தி விட்டார்கள். அந்த மாதமே வரித்துறையிலிருந்து உங்கள் பொறுப்பில் 800 யூரோ உள்ளது. அதை நீங்கள் செலுத்த வேண்டும் என்று கடிதம் வந்து விட்டது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் இவ்வாறிருந்தும், சரி! கடன் வாங்கி வரியும் கட்டி விடலாம் என்று துணிவு கொண்டு வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தி விட்டேன். இதற்கு சில வாரங்களுக்குப் பிறகே வரித்துறையிலிருந்து, நாங்கள் மீண்டும் உங்கள் காகிதங்களை ஆய்வு செய்தோம். உங்கள் பொறுப்பில் எந்தக் கடனும் இல்லை; மாறாக நாங்கள் தான் உங்களுக்கு 4400 யூரோ திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கடிதம் வந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது வண்டி விபத்திற்குள்ளாகி விட்டது. இழப்பு ஏற்பட்டது. யாரோ இழப்பு ஏற்படுத்தி விட்டார்கள். அதற்கும் எனக்கு 4700 யூரோ கிடைத்து விட்டது. இவ்வாறு, சிறிது துணிச்சல் மேற்கொண்டு நான் சந்தாவில் கூடுதலாக வழங்கியதை செலுத்துவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்து விட்டான். இப்பொழுது இதை ஒருவர் தற்செயல் என்று கூறலாம். ஆனால் இது அல்லாஹ்வின் குறிப்பான அருளின் விளைவு என்பதை ஒரு நம்பிக்கையாளர் அறிவார்.

கனடாவின் லஜ்னா சத்ர் கூறுகிறார்கள்: ஒரு சகோதரி கூறுகிறார்கள். மூன்று வருடங்களுக்கு முன்பு அவர்களின் கணவர் தமது கல்வியில் மும்முரமாக இருந்தார்கள். வேலையுடன் அனைத்து வெளிப் பொறுப்புகளும்

அவர்கள் மீது வந்து விழுந்தது. இந்த களைப்படைய செய்யும் அன்றாட வாழ்க்கை சுழற்றி அவர்களை நலிவடைய வைத்து விட்டது. அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கலானார்கள்.

இதற்கிடையே வக்ஃபே ஜதீத், தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களின் வாக்குறுதி வழங்கும் நேரம் வந்து விட்டது. ஆக அவர்கள் தமது வருமானத்தை விட இரட்டிப்பாக வாக்குறுதி எழுதி விட்டார்கள். சில காலங்களுக்குப் பிறகு அவர்களுக்கு வேலை போய்விட்டது. மிகவும் நெருக்கடிக்கு ஆளாகிவிட்டார்கள். Credit Card மூலமாக செலவுகளை நிறைவேற்ற துவங்கி விட்டார்கள்.

வருடத்தின் கடைசியில் சந்தா செலுத்துவதற்கான நேரம் வந்தபோது, நிர்பந்தமான நிலையில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு, அவர்கள் CRedit Card ஐ கொண்டே சந்தாக்களையும் செலுத்தி விட்டார்கள். அல்லாஹ் வினோதமான வல்லமையை வெளிப்படுத்தினான். அதாவது அந்த நாட்களிலேயே அந்த பேங்கில் இருந்து, அவர்கள் Credit Card, Protection incurance என்பதும் வேலை போய் விட்டால், அதற்காக விண்ணப்பிக்கலாம் என்பதும் தெரிய வந்தது. இவ்வாறு அ வர்களின் மூலம் செலுத்தப்பட்ட அனைத்துத் தொகைகளுக்கும் ஏற்பாடு ஆகிவிட்டது.

மேலும் அத்துடன் அவர்களுக்கு புதிய வேலையும் கிடைத்து விட்டது. அது முந்தைய வேலையை விட மிகச் சிறந்ததாக இருந்தது. பொருளாதார நிலை சீரடைய ஆரம்பித்து விட்டது. அவர்கள் முன்னரை விட அதிகமாக கட்டாயச் சந்தாக்களை செலுத்தினார்கள். விருப்பச் சந்தாக்களின் வாக்குறுதிகளை அதிகரித்து விட்டார்கள். இதற்கிடையே அவர்களின் கணவரின் படிப்பும் முடிவடைந்து விட்டது. அவருக்கும் நல்ல வேலை கிடைத்து விட்டது. அவர்கள் தமது வேலையை விட்டு விட்டார்கள். கணவரின் வேலையின் மூலமே வாழ்க்கை கழிய ஆரம்பித்து விட்டது.

இந்தோனேஷியாவின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: அமீர் சாஹிப் அவர்களின் குடும்பத்தார் எப்பொழுதும், ரமலான் மாதத்திலேயே தமது வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களை செலுத்திவிட வேண்டும் என்று விரும்புவார்கள். இந்த ஆண்டு வருமானம் குறைவாக இருந்தது. வாக்குறுதியை நிறைவேற்றுவது வெளிப்படையாகப் பார்க்கும்போது அசாத்தியமாக இருந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்கள்: நான் ரமலான் மாதத்தில் அவர்களை சுயமாகப் பார்த்திருக்கிறேன். அவர்கள் நோன்பு வைத்துக் கொண்டு, தினமும் தமது குடும்பத்தாருடன் மலைப் பகுதியில் 4 கி.மீ பயண தூரத்தைக் கடந்து தமது Candle nut வயலுக்கு செல்வார்கள். அதன் மூலம் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றலாம் என்பதற்காக இவ்வாறு செய்வார்கள். ஆக அவர்கள் ரமலானுக்குள்ளேயே தமது 2 இலட்சம் தொகை வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார்கள். மேலும் இவ்வளவு பெரிய தொகையை மிகவும் கடினமாக முயற்சி செய்யாமல் ஒன்று திரட்டுவது, அவர்களுக்கு அசாத்தியமாக இருந்தது.

முபல்லிக் சாஹிப் கூறுகிறார்கள்: நான் அவர்களிடம் நீங்கள் நோன்பு வைத்துக் கொண்டு இவ்வளவு சிரமப்படும் அளவு எந்த விஷயம் உங்களைக் கட்டாயப்படுத்துகிறது என்று கேட்டேன். அவர்கள், நானும் எனது குடும்பத்தாரும் காலத்தின் கலீஃபா அவர்களின் கட்டளைகள்படி செயல்பட்டவாறே இறைவனின் விருப்பத்தை பெற விரும்புகிறோம் என்று கூறினார்கள்.

புர்கீனாஃபாஸோவின் ஒரு ஜமாஅத் இகாயீ உள்ளது. அங்கு நயா நிபா சாஹிப் எனும் ஒரு நண்பர் இருக்கிறார்கள். இவர்கள் பைஅத் செய்து பத்து வருடத்திற்கும் மேற்பட்ட காலம் ஆகிவிட்டது. ஆனால் சந்தாக்களை செலுத்துவதில் பலவீனமாக இருந்தார்கள். வீட்டில் பெரும்பாலும் நோயும் பஞ்ச நிலையும் இருந்து வந்தது. சில காலங்களாக இவர்கள் சந்தாக்களை, குறிப்பாக தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களை முறையாக செலுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

அதன் காரணமாக, அல்லாஹ்வின் அருளால் அவர்களுக்குப் வறுமை மட்டுமே அகலவில்லை. மாறாக, இருந்த நோய் நொடிகளிலிருந்தும் அல்லாஹ் உடல் ஆரோக்கியத்தை வழங்கினான். இந்த ஆண்டு இவர்கள் அதிகதிகமாக வக்ஃபே ஜதீதில் பங்கு பெற்றார்கள். எந்த மக்கள் இவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருந்தார்களோ, அவர்கள் தாமே முன்வந்து இவர்களிடம் காண்ட்ராக்ட் போட வந்தார்கள். வேலை கொடுத்தார்கள்.

இத்ரீஸ் சாஹிப் கூறுகிறார்கள்: வக்ஃபே ஜதீத் மூலமாக செல்வத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாட்டை செய்திருப்பது அல்லாஹ்வின் அருளே ஆகும்.

ஆக இதுவே கடனை அதிகரித்துக் திருப்பித் தரக்கூடிய அல்லாஹ்வின் பாணியாகும். இந்த சில சம்பவங்களை நான் எடுத்துரைத்துள்ளேன். இவ்வாறு எண்ணற்ற சம்பவங்கள் நடக்கின்றன. அல்லாஹ் எப்பொழுதும் ஜமாஅத் மக்களோடு இவ்வாறே நடந்து கொள்வானாக. அவர்கள் கலப்பற்றத்தன்மை மற்றும் விசுவாசத்தோடு தியாகங்களையும் செய்து கொண்டே இருப்பார்களாக. அல்லாஹ் தனது அருளின் காட்சிகளையும் காட்டிக் கொண்டே இருப்பானாக.

இப்போது நான் வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்தவாறு, கடந்த ஆண்டின் சில புள்ளி விவரங்களை எடுத்துரைப்பேன். அல்லாஹ்வின் அருளால் 63 வது ஆண்டு டிசம்பர் 31, 2020 உடன் முடிவடைந்தது. 64வது ஆண்டு ஜனவரி 1லிருந்து ஆரம்பமாகிவிட்டது. அல்லாஹ்வின் அருளால் நடப்பு ஆண்டில் 1,05,30,000 (ஒரு கோடியே ஐந்து லட்சத்து முப்பதாயிரம்) பவுண்ட் பொருள் தியாகம் செய்யும் நல்வாய்ப்பு ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட 8,87,000 (எட்டு லட்சத்து என்பத்தி ஏழாயிரம்) பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ். இது எந்த மனித முயற்சியின் விளைவாகவும் இருக்க முடியாது. இது வெறும் அல்லாஹ்வின் சிறப்பான அருளாகும்.

இந்த ஆண்டும் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில், உலக ஜமாஅத்துகளில் பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது. அல்லாஹ்வின் அருளால் அவர்கள் மிகவும் அதிகரித்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் பிரிட்டன் உடைய லஜ்னா இமாயில்லாஹ் மிகவும் கடினமாக உழைத்து பணிபுரிகிறார்கள். எந்த அளவு பெரிய எண்ணிக்கையில் இந்த ஆண்டு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோ அதைப் பார்த்து, ஆண்களும் லஜ்னாவைப் போன்று கடினமாக உழைத்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டாவது இடத்தில் ஜெர்மனி உள்ளது. ஆக அவர்களும் மிகவும் அதிகரித்துள்ளார்கள். ஆனால் தற்போது பிரிட்டன் அவர்களுக்கு முன் உள்ளது.

பாகிஸ்தானோ கரன்ஸி காரணமாக ஜமாத்துகளில் மிகவும் பின்னால் சென்று விட்டது. ஆக மூன்றாவது இடத்திலேயே உள்ளது. ஆனால் எவ்வாறிருப்பினும் ஒட்டுமொத்த ரீதியாக நாட்டின் கரன்ஸி அடிப்டையில் இங்கும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் தியாகம் செய்கின்றனர். பாகிஸ்தானிலோ உயிர்த்தியாகங்களும் செய்யப்படுகின்றன. பொருட் தியாகங்களும் செய்யப்படுகின்றன. மூளைத் தியாகம் அதாவது தொடர்ந்து அவர்களுக்கு தொல்லை கொடுக்கப்படுகிறது. அல்லாஹ் அவர்களுக்கும் எளிமையை ஏற்படுத்துவானாக. கனடா நான்காவது இடத்தில் உள்ளது. பிறகு அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத், இந்தேனேஷியா மற்றும் கானா.

ஆப்ரிக்க நாடுகளில் கானாவும் இப்பொழுது பெரிய நாடுகளோடு போட்டி போட்டு முதல் பத்து ஜமாஅத்துகளின் பட்டியலில் வந்து விட்டது.

தனி நபர் சந்தா அடிப்படை.யில் அமெரிக்க முதலிடத்தில் உள்ளது. பிறகு சுவிட்சர்லாந்து உள்ளது. பிறகு பிரிட்டன் உள்ளது.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஆஃப்ரிக்காவில் கானா முதலிடத்தில் உள்ளது. பிறகு இரண்டாவது இடத்தில் மொரிஷியஸ், பிறகு முறையே நைஜீரியா, புர்கினோஃபாஸோ, தன்ஸானியா, சிராலியோன், கேம்பியா, கென்யா, மாலி மற்றும் பெனின். அவர்களின் கலந்து கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கை 14,52,000 ஆக உள்ளது.

ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் பிரிட்டனின் முதல் பத்து பெரிய ஜமாஅத்துகளில் ஃபாரன் ஹம் முதலிடத்தில் உள்ளது. பிறகு இரண்டாவது இடத்தில் இஸ்லாமாபாத், மூன்றாவது இடத்தில் ஒஸ்டர் பார்க், நான்காவது இடத்தில் பட்டினீ, ஐந்தாவது இடத்தில் பர்மிங்கம் சவுத், ஆறாவது இடத்தில் ஜில்லிங்கம், ஏழாவது இடத்தில் சவுத் சீம், எட்டாவது இடத்தில் மஸ்ஜித் ஃபஸ்ல், ஒன்பதாவது இடத்தில் பர்மிங்கம் வெஸ்ட் மற்றும் பத்தாவது இடத்தில் நியூ மால்டென்.

ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில், முதல் ஐந்து மண்டலங்களில் முதலிடத்தில் பைத்துல் ஃபுதூஹ் உள்ளது. பிறகு முறையே மஸ்ஜித் ஃபஸல், இஸ்லாமாபாத், மிட்லேண்ட்ஸ் மற்றம் பைத்துல் இஹ்ஸான்.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகளில் ஃபாரம் ஹம் முதலிடத்தில், பிறகு இரண்டாவது இடத்தில் இஸ்லாமாபாத், பிறகு முறையே ரூஹிம்டன் வெல், பைத்துல் ஃபுதூஹ், மிட்செல் மார்க், கிளாஸ்கோ, சீம், கில்ஃபெர்ட், ஒஸ்டர் பார்க் மற்றும் பர்மிங்கம் சவுத்.

சிறிய ஜமாஅத்துகளில் ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்; ஹெமின்டன் ஸ்பா, ஸ்பென் வேலி, போரன் மத், பர்டன், மோன்டர் நட், பீட்டர் பரா, காவின்ட்ரீ, ஏடம்பரா, கேத்லீ மற்றும் சவான்ஸீ.

ஜெர்மனியின் ஐந்து உள்ளூர் அமாரத்துகள்: முதலிடத்தில் ஹேம்பர்க் உள்ளது. பிறகு முறையே ஃபிராங்க்ஃபர்ட், வெஸ்பாடேன், கிராஸ் கிராவ் மற்றும் டட்ஸன் பாக்.

பருவம் அடைந்தவர்களில் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தக்கூடியவர்களில் ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள்: ருவீடர் மார்க் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே நோயிஸ், நீதா, மஹ்தியாபாத், மாயின்ஸ், கோப்லம்ஸ், ஹனாவோ லாங்கொன், ஃப்லோரன்ஸ் ஹாயிம் மற்றும் பெனீ பர்க்.

அத்ஃபால் பதிவேட்டில் முதல் ஐந்து மண்டலங்கள்: முதலிடத்தில் ஹேஸன் உள்ளது. பிறகு முறையே ரூதோஸ்ட், ஹேஸ் வடே, ரெயின் லேண்ட் ஃபால்ஸ் மற்றும் வெஸ்ட் ஃபாலன் டானஸ்.

பாகிஸ்தானின் முதல் மூன்று ஜமாஅத்துகள்: முதலிடத்தில் லாஹூர், இரண்டாவது இடத்தில் ரப்வா மற்றும் மூன்றாவது இடத்தில் கராச்சி.

பருவம் அடைந்த சந்தா செலுத்தக்கூடியவர்களில், மாநிலங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: இஸ்லாமாபாத் முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் ராவல் பிண்டி, மூன்றாவது இடத்தில் சர்கோதா, பிறகு முறையே குஜராத், குஜ்ரன்வாலா, உமர் கோட், ஹைத்ராபாத், பெஷாவர், மீர்பூர்காஸ் மற்றும் டேரா காஸி கான்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்: டிஃபென்ஸ் லாஹூர் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே இஸ்லாமாபாத், ஷெஹர், டவுன்ஷிப் லாஹூர், கிளிஃப்டன் கராச்சி, தாருத் திக்ர் லாஹூர், குல்ஷனாபாத் கராச்சி, சமனாபாத், அஸீஸாபாத் கராச்சி, ராவல்பிண்டி நகரம் மற்றும் அல்லாமா இக்பால் டவுண் லாஹூர்.

அத்ஃபால் பதிவேட்டில் பாகிஸ்தானின் மூன்று பெரிய ஜமாத்துகளில், முதலிடத்தில் லாஹூர், இரண்டாவது இடத்தில் கராச்சி மற்றும் மூன்றாவது இடத்தில் ரப்வா.

அத்ஃபால் பதிவேட்டில் மாநிலங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: இஸ்லாமாபாத் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே குஜ்ரன்வாலா, சர்கோதா, ஷேக்குபூரா, ஃபைஸலாபாத், டேரா காஸி கான், குஜராத், உமர் கோட், நாரோவால் மற்றும் பஹாவல் நகர்.

கனடாவின் அமாரத்துகள்: முதலிடத்தில் வார்ன் உள்ளது. பிறகு முறையே பீஸ் வில்லேஜ், நேக்கோவர், பிரஹ்மண்டன் வெஸ்ட் மற்றும் டொரொண்டோ வெஸ்ட். கானாவின் பத்து பெரிய ஜமாஅத்துகள்: பிரட் ஃபோர்ட் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே டர்ஹம், மில்டன் ஈஸ்ட், அட்மில்டன் வெஸ்ட் உள்ளது. பிறகு முறையே டர்ஹம், மில்டன் ஈஸ்ட், அட்மில்டன் வெஸ்ட், விண்ட்ஸர், மில்டன் வெஸ்ட், ரிஜாயினா, அடாவோ ஈஸ்ட், ஏட்ரீ மற்றும் ஏபட்ஸ் ஃபோர்ட்.

அத்ஃபாலில் முன்னணி பெற்ற அமாரத்துகள்: முதலிடத்தில் வார்ன் உள்ளது. பிறகு முறையே டொரொண்டோ வெஸ்ட், பீஸ் வில்லேஜ், கேல்கரி மற்றும் பிரஹ்மண்டன் வெஸ்ட்.

அத்ஃபாலில் ஜமாஅத்துகளில்: பிரட் ஃபோர்ட் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே டர்ஹம், மில்டன் வெஸ்ட், பிலான்டன், ஹெமில்டன் மற்றும் மவுண்டெய்ன்.

வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: மேரி லேண்ட் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே லாஸ் ஏஞ்சல்ஜ், சேட்டல், சிலிக்கான்வேலி, போஸ்டன், ஆஸ்டன், ஒஷ் கோஷ், சீராகோஸ், ராச்சிஸ்டர் மற்றும் மெனி சோட்டா.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: மேரி லேண்ட் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே லாஸ் ஏஞ்சல்ஸ், சேட்டல், லேண்டோ, சிலிக்கான் வேலி, ஒஸ்டன், ஒஷ் கோஷ், மெஸோட்டா, லாஸ் வேகஸ் மற்றும் ஃபிஷ் பர்க்.

இந்தியாவின் ஜமாஅத்துகளில் மாநிலங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: முதலிடத்தில் கேரளா உள்ளது. பிறகு முறையே தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகா, ஒடிசா, பஞ்சாப், மேற்கு வங்காளம், தில்லி மற்றும் உத்தர பிரதேசம்.

ஜமாஅத்துகளில்: கோயம்புத்தூர் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே காதியான், பத்தப்பிரியம், ஹைதராபாத், கொல்கத்தா, பெங்களூர், கோழிக்கோடு, கன்னூர் டவுன், ரிஷி நகர் மற்றும் கேரங்க்.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகள்: மெல்போர்ன் லாங் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே வார்ன், காஸில் ஹில், மாஸ்டன் பார்க், மெல்போர்ன் பேரூக், அடிலைய்ட் சவுத், மவுண்ட் சவுத், பெஸித், பொர்த், லோகன் ஈஸ்ட் மற்றும் பிளாக் டவுன்.

பருவம் அடைந்தவர்களில் ஆஸ்திரேலியாவின் ஜமாஅத்துகள்: மெல்போர்ன் லாங் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே வார்ன், காஸில் ஹில், மாஸ்டன் பார்க், மெல்போர்ன் பார்க், பெஸித், மவுண்ட் ட்ரைவெட், பிளாக் டவுன், அடிலைய்ட் சவுத், பெர்த் மற்றும் கேன்பரா.

அத்ஃபால்களின் ஆஸ்திரேலியாவின் ஜமாஅத்துகள்: மெல்போர்ன் லாங் முதலிடத்தில் உள்ளது. பிறகு முறையே அடிலைய்ட், மெல்போர்ன் பேரூக், மவுண்ட் ட்ரைவெட், லோகன் ஈஸ்ட், பெஸித், காஸில் ஹில், மெல்போர்ன் ஈஸ்ட், பொர்த் மற்றும் அடிலைய்ட் வெஸ்ட்.

அல்லாஹ் தியாகம் செய்யக்கூடிய இந்த அனைவரின் செல்வங்களிலும் வாழ்நாளிலும் அளவற்ற பரக்கத்தை ஏற்படுத்துவானாக. இவர்களுக்கு ஆன்மீகத்தில் முன்னேற்றம் வழங்குவானாக. இவர்கள் இறைவனுக்கான உரிமைகளையும் அடியார்களுக்கான உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாக இருப்பார்களாக.

இன்றைய நாட்களில் மீண்டும் நான், ஏற்கனவே வலியுறுத்தி வருவதுபோன்று, பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் சிரமங்களை அகற்றுவானாக. அவர்களின் பிரச்சனைகளை அகற்றுவானாக. எதிரிகளின் கைகள் அவர்கள் வரை எட்டுவதிலிருந்து தடுப்பானாக. எந்த எதிரிகளின் சீர்திருத்தம் ஏற்படாதோ அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக. இறைவழியில் சிறை சென்றவர்கள் விரைவில் விடுதலையாவதற்கும் வழி செய்வானாக.

அதில் அல்ஜீரியாவைச் சேர்ந்த இறைவழியில் சிறை சென்றவர்களும் உள்ளனர். அல்ஜீரியாவிலும் அதிக எதிர்ப்பு உள்ளது. அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் நிம்மதிக்கான வழியை ஏற்படுத்துவானாக.

குறிப்பாக துஆக்கள், நஃபில்கள் மற்றும் சதகாக்களில் அழுத்தம் கொடுங்கள். பாகிஸ்தானின் ஒட்டுமொத்த நிலைமைகளின் அடிப்படையிலும், அமைதியின் அடிப்படையிலும் நிலைமைகள் சரியில்லை. அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்கு அமைதி நிலையை உருவாக்குவானாக. ஒருவர் மற்றவருடைய கழுத்துகளை வெட்டுவதில் மூழ்கியுள்ள நிலை, தீவிரவாதம், சண்டை சச்சரவு மற்றும் குழப்பம் ஆகியவற்றை அல்லாஹ் விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக.

அங்குள்ள நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் உண்மையான முறையில் பொது மக்களுக்குத் தொண்டாற்றக்கூடியவர்களாக இருப்பார்களாக. நீதியோடு செயல்படக்கூடியவர்களாக ஆவார்களாக. இவ்வாறே மிக வேகமாக சீர்கெட்டுக் கொண்டிருக்கக்கூடிய உலகின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முழு மனித குலத்தின் மீதும் அருள் புரிவானாக.

*(தமிழில்: மவ்லவி அதாவுல் முக்னீ)*

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களுக்கு என்றென்றும் சாந்தி நிலவுவதாக. உலகங்களுகெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (37:182,183)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களாகிய நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். 37:172,173)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களின் சிங்கப்பூர் சுற்றுப் பயணம் (டிசம்பர் 2013)

**2013 ஆம் ஆண்டு டிசம்பர் 21 சனிக்கிழமை மற்றும் டிசம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை**

இன்றைய நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அருளுக்குரிய நாளாகும். ஸய்யிதுனா (அய்ய...) ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சிங்கப்பூருக்கு இரண்டாவது முறையாக பயணம் மேற்கொண்டார்கள். இதற்கு முன்பு ஹுஸூர் (அய்ய...) அவர்கள் முதல் முறையாக 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 முதல் ஏப்ரல் 10 வரை பயணம் மேற்கொண்டிருந்தார்கள். இந்த சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறப்பம்சம் இதுவாகும். அதாவது இந்த பகுதியைச் சேர்ந்த இந்தோனேஷியா, மலேஷியா, துர்னைன், ஃபிலிப்பைன், தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம், மியான்மர் (பர்மா) ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஜமாஅத் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் சிங்கப்பூர் வந்தடைகின்றனர்.

இவ்வாறு இந்த ஒரு நாட்டின் பயணத்தின் மூலம் 9 நாடுகளைச் சேர்ந்த ஜமாஅத்துகள் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய பயணத்திலிருந்து பயன் பெறுவார்கள். மேலும் இந்தப் பயணம் ஹுஸூர் அவர்களை காண வேண்டும் என்ற அவர்களின் அனைவரது தாகத்தையும் தணிக்கும். மேலும் ஆண்டாண்டு காலமாக தமது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்க வேண்டும் என துடித்துக் கொண்டிருந்த ஆன்மாக்களுக்கு திருப்தியை வழங்கும்.

ஹுஸூர் அவர்களின் இந்த சுற்றுப் பயணத்துடன் அல்லாஹ் ஏற்கனவே நிர்ணயித்துள்ள எல்லையற்ற அருட்கள் மற்றும் பரக்கத்துகள் மற்றும் வெகுமதிகளிலிருந்து அவர்களும் பங்கு பெறுவார்கள். ஹுஸூர் அவர்கள் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இந்த பயணத்தை குறித்து இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்கள்: இன்ஷா அல்லாஹ் சில வாரங்களுக்காக நான் சுற்றுப் பயணத்தில் செல்கின்றேன். எல்லா வகையிலும் இந்தப் பயணத்தை அல்லாஹ் அருளுக்குரியதாக ஆக்குவதற்காகவும், பயணத்தின் நோக்கத்தை அல்லாஹ் தனது அருளால் முழுமை செய்வதற்கும் துஆ செய்யுங்கள். இந்த அருளுக்குரிய பயணத்தின் துவக்கம் டிசம்பர் 21, 2013ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

ஹுஸூர் அவர்கள் பிற்பகல் 5.10 மணிக்கு தனது இல்லத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்களை பயணத்தில் வழியனுப்பி வைப்பதற்காக காலையிலிருந்தே ஜமாஅத் உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும் லண்டன் ஃபஸல் பள்ளிவாசலின் வெளியிலுள்ள வளாகத்தில் ஒன்றுகூடி இருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் அருள்கூர்ந்து சிறிது நேரத்திற்காக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மத்தியில் வருகை தந்தார்கள். அப்போது மதிப்பிற்குரிய அப்துல் வஹ்ஹாப் பின் ஆதம் சாஹிப், அமீர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் கானா அவர்களுடன் கலந்துரையாடினார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் கூட்டுத்துஆ செய்தார்கள். தனது கரத்தை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள்.

5.15 மணிக்கு விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். ஹுஸூர் அவர்கள் விமான நிலையத்திற்கு வந்தடைவதற்கு முன்பாகவே பொருட்களை பதிவது, போர்டிங் கார்டை பெறுவது, இமிகிரேஷன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இவை அனைத்தும் ஒரு சிறப்பான ஏற்பாட்டின் கீழ் முழுமை செய்யப்பட்டிருந்தன. ஹுஸூர் அவர்கள் 6 மணி அளவில் விமான நிலையத்தை வந்தடைந்தார்கள். மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப் (அமீர் ஜமாஅத் யூ.கே), மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் (முபல்லிக் இன்சார்ஜ், யூ.கே), மதிப்பிற்குரிய அப்துல் வஹ்ஹாப் சாஹிப் (அமீர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் கானா), மதிப்பிற்குரிய வஸீம் அஹ்மது சாஹிப் சவுத்ரி (சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் யூ,கே), மதிப்பிற்குரிய முனீருத்தீன் சாஹிப் ஷம்ஸ் (அடிஷனல் வகீலுத் தஸ்னீஃப் – MTA) மதிப்பிற்குரிய அக்லாக் அஹ்மது அன்ஜும் சாஹிப் (வகாலத் தப்ஷீர்), மதிப்பிற்குரிய ஸஹூர் அஹ்மது சாஹிப் (தனிச் செயலர் அலுவலகம்), மதிப்பிற்குரிய மேஜர் மஹ்மூத் அஹ்மது சாஹிப் (சிறப்பு பாதுகாப்பு அதிகாரி) ஆகியோர் ஹுஸூர் அவர்களை பயணத்தில் வழியனுப்பி வைப்பதற்காக விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இந்த அனைத்து சகோதரர்களும் ஹுஸூர் அவர்களுடன் கை குலுக்குவதற்கான நற்பாக்கியம் பெற்றிருந்தனர். மேலும் ஹுஸூர் அவர்களுக்கு அல்விதா கூறினர். சுமார் 7.15 மணிக்கு விமானத்தில் ஏறி அமர்வதற்காக ஹுஸூர் அவர்கள் விமான நிலையத்தின் லான்ச்சிலிருந்து புறப்பட்டார்கள். ஹுஸூர் அவர்களின் ஒரு வாகனம் ஒரு சிறப்பு ஏற்பாட்டின்கீழ் விமானத்தின் படிகள் வரை அழைத்துச் செல்ல கொண்டு வரப்பட்டிருந்தது. மேலும் நெறிமுறை அதிகாரி ஹுஸூர் அவர்களை விமானத்தில் ஏறி அமரச் செய்து விட்டு திரும்பிச் சென்றார். BA0011 என்ற பிரிட்டிஷ் Airway விமானம் இரவு 7.55 மணிக்கு ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூரை நோக்கி புறப்பட்டது. 12 மணி 20 நிமிடங்கள் தொடர்ச்சியாக பயணித்த பிறகு அடுத்த நாள் அதாவது டிசம்பர் 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூர் உள்ளூர் நேரத்தின் அடிப்படையில் பிற்பகல் 3.15 மணி அளவில் விமானம் சிங்கப்பூரின் சாங்கி சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது. ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய பாதங்கள் இரண்டாவது முறையாக சிங்கப்பூர் மண்ணில் பட்டன.

சிங்கப்பூரின் இந்த சர்வதே விமான நிலையம் உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றாக கணக்கிடப்படுகின்றது. இங்கு ஒவ்வொரு 3 நிமிடத்திலும் விமானம் தரை இறங்கவும், விண்ணில் பறக்கவும் செய்கிறது. ஹுஸூர் அவர்கள் விமானத்திலிருந்து வெளியே வருகை தந்தவுடன் நெறிமுறை அதிகாரி தனது ஏனைய சில ஊழியர்களுடன் ஹுஸூர் அவர்களை வரவேற்றார். ஹுஸூர் அவர்கள் ஒரு சிறப்பான ஏற்பாட்டின் கீழ் விமான நிலையத்தின் சிறப்பு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்கு சிங்கப்பூர் ஜமாஅத்தின் தேசிய தலைவர் அப்துல் அஸீஸ் மஜீத் சாஹிப் அவர்களும், சிங்கப்பூர் முபல்லிக் இன்சார்ஜ் ஹஸன் பஸரி சாஹிப் அவர்களும், சிங்கப்பூர் ஜமாஅத்தின் துணைத் தலைவர் அப்துல் அலீம் சாஹிப் அவர்களும், சிங்கப்பூரின் சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா சயீத் சாஹிப் அவர்களும், இந்தோநேஷியா ஜமாஅத்தின் அமீர் அப்துல் பாஸித் சாஹிப் அவர்களும், இந்தோநேஷியாவின் முபல்லிக் இன்சார்ஜ் சயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களும், மலேஷியாவின் முபல்லிக் இன்சார்ஜ் அய்னுல் யகீன் சாஹிப் அவர்களும், ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய தலைவர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் மஃஸூம் அஹ்மது சாஹிப் அவர்களும், கம்போடியாவின் முபல்லிக் இன்சார்ஜ் ஃபஜர் அய்யூப் சாஹிப் அவர்களும், வியட்நாம் நாட்டின் முபல்லிக் முஜீப் அஹ்மது சாஹிப் அவர்களும், மினான்மர் ஜமாஅத்தின் தேசிய தலைவர் அப்துல் காதர் சாஹிப் அவர்களும் ஹுஸூர் அவர்களை வரவேற்றார்கள். மேலும் ஹுஸூர் அவர்களுடன் கை குலுக்கும் நற்பாக்கியம் பெற்றார்கள்.

சிங்கப்பூர் ஜமாஅத்தின் தேசிய செயற்குழுவைச் சேர்ந்த சில பொறுப்பாளர்கள் மட்டுமின்றி இந்தோனேஷியா, மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த சில பொறுப்பாளர்களும், அண்டை நாடுகளிலிருந்து வந்திருந்த முபல்லிக்மார்களும் தனது அன்பிற்குரிய எஜமானரை சந்திப்பதற்கு நற்பாக்கியம் பெற்றார்கள். சிங்கப்பூர் தேசிய லஜ்னா தலைவியும், துணைத் தலைவியும், இந்தோனேஷிய தேசிய லஜ்னா தலைவி மற்றும் துணைத் தலைவியும், இந்தோனேஷியாவின் முன்னாள் சத்ர் லஜ்னா ஸிஸ்டர் கதீஜா சாஹிபா அவர்களும் ஹஸ்ரத் பேகம் சாஹிபா அவர்களுக்கு நல்வரவு கூறி வரவேற்றார்கள்.

லண்டனிலிருந்து ஒரு நாள் முன்பாகவே சிங்கப்பூர் சென்றடைந்திருந்த MTA குழுவினர் இந்த அனைத்து வரவேற்பு காட்சிகளையும் பதிவு செய்து கொண்டிருந்தனர். விமான நிலையத்தின் இந்த சிறப்பு அறையில் இமிகிரேஷன் தொடர்பான ஏற்பாடுகள் முழுமையான பிறகு ஹுஸூர் அவர்கள் சுமார் 4 மணி அளவில் விமான

நிலையத்திலிருந்து புறப்பட்டு 4.30 மணி அளவில் லோட்டஸ் அப்பார்மண்ட்ஸ் என்ற இடத்திற்கு வந்தடைந்தார்கள். உள்ளூர் ஜமாஅத் இந்த அப்பார்ட்மண்ட்ஸில் தான் ஹுஸூர் அவர்களுக்கும், குழுவின் உறுப்பினர்களுக்கும் தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. இந்த அப்பார்ட்மண்ட்ஸ் ஜூசியாட் என்ற பகுதியில் அமைந்துள்ளது. மேலும் அது விமான நிலையத்திலிருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் உள்ளது. ஹுஸூர் அவர்கள் 6 மணி அளவில் வருகை தந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் தனது தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள்.

நிகழ்ச்சிநிரலுக்கேற்ப ஹுஸூர் அவர்கள் 7:55மணிக்கு சிங்கப்பூர் ஜமாஅத்தின் தலைமையகம் மஸ்ஜித் தாஹாவிற்கு புறப்பட்டுச் சென்றார்கள். தங்குமிடத்திலிருந்து தலைமையகம் அமைந்துள்ள தூரம் வெறும் 1 கி.மீ ஆகும். 8 மணி அளவில் ஹுஸூர் அவர்கள் மஸ்ஜித் தாஹாவிற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் மிஷன் ஹவுஸை வந்தடைந்தபோது ஜமாஅத் உறுப்பினர்கள் தனது கரங்களை உயர்த்தி மிகவும் உணர்வுப்பூர்வமாக நல்வரவு கூறி தமது அன்பிற்குரிய எஜமானரை வரவேற்றார்கள். அழகிய ஆடைகள் அணிந்திருந்த உள்ளூர் சிறுவர்களும், சிறுமிகளும் இணைந்து துஆக்கள் நிறைந்த நல்வரவு பாடலை படித்தார்கள். சில குறிப்பிட்ட கவிதைகளை இனிமையான குரல்களில் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தார்கள். சிங்கப்பூரைச் சேர்ந்த இந்த சிறுமிகளும், சிறுவர்களும் உருது மொழி அறியாதவர்களாக இருந்தார்கள். ஆயினும் உருது மொழியில் துஆக்கள் நிறைந்த அந்த கவிதைகளை கூட்டுப்பாடலாக பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள், பெண்கள் அனைவரது பார்வைகளும் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய முகத்தின் மீதே மையம் கொண்டிருந்தது. எல்லா புறமிருந்தும் அஸ்ஸலாமு அலைக்கும் ஹுஸூர் என்ற குரல் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது. 7 ஆண்டு கால நெடிய காலத்திற்குப் பிறகு அவர்களின் வாழ்வில் மீண்டும் ஒரு முறை அந்த சந்தர்ப்பம் வந்திருந்தது. அதாவது அவர்களின் அன்பிற்குரிய எஜமானர் அவர்களை சந்திப்பதற்காக அவர்களுக்கு மத்தியில் நின்று கொண்டிருந்தார்கள். இது மகிழ்ச்சியும், இன்பமும் நிறைந்த நொடிப்பொழுதாக இருந்தது. தனது அன்பிற்குரிய எஜமானரை சந்தித்து பயனடைந்து கொண்டிருந்த அந்த மக்கள் உள்ளபடியே மிகவும் நற்பாக்கியம் பெற்ற மக்களாக இருந்தனர்.

ஹுஸூர் அவர்களும் தனது கரத்தை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் ஆண்களை கடந்தவாறு ஹுஸூர் அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். பின்னர் மக்ரிப், இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தனது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

சிங்கப்பூர் நாடு ஒரு பெரிய தீவு மற்றும் 63 சிறிய தீவுகளை உள்ளடக்கிய நாடாகும். இதன் பரப்பளவு 720 முரப்பா கி.மீ ஆகும். இதன் கடற்புற எல்லை 193 கி.மீ ஆகும். இந்த நாடு கிழக்கிலிருந்து மேற்கு வரை 40 கி.மீ தொலைவிலும், வடக்கு முதல் தெற்கு வரை 20 கி.மீ தொலைவிலும் பரந்துள்ளது. இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகை மொத்தம் 4 மில்லியன் ஆகும். சிங்கப்பூரின் வடக்கில் மலேஷியாவும் தெற்கில் இந்தோனேஷியாவும் உள்ளது. மலேஷியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் எல்லை 1 கி.மீ நீளமான பாலத்தின் மூலமாக இரண்டும் இணைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் உலகின் 4வது பெரிய துறைமுகமாகும். அங்கு ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான டன்கள் அளவில் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த முழு நாடுமே பசுமையாக நிறைந்திருக்கின்றது. பல நிறங்களைக் கொண்ட அழகிய பூக்களும், சிறிய சிறிய பச்சைப்பசுமையான மரங்களும், மலைகளும் நிறைந்து காணப்படுகிறன. நீலம் நிறம் நிறைந்த தண்ணீரால் சூழப்பட்ட கடல்கள் அழகிய தீவுகளாக காட்சியளிக்கின்றன. உள்ளூர் வாசிகள் மிகவும் மகிழ்ச்சி நிறைந்த மக்களாகவும் உள்ளனர். வேலையில்லாத மனிதர் இல்லை என்று கூட கூறலாம். இங்குள்ள கல்வித்தரம் மிகவும் உயர்ந்துள்ளது. 697 கி.மீ முரப்பா அளவில் பரந்துள்ள இந்த நாட்டில் 500ஐ விட அதிகமான பள்ளிக்கூடங்களும், 200 பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. இதிலிருந்து இந்த நாட்டின் கல்வித் தரத்தை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

1935 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஜமாஅத் உருவானது. ஹஸ்ரத் மவ்லானா குலாம் ஹஸன் சாஹிப் அவர்கள் முதல் முபல்லிக்காக சிங்கப்பூரை வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1934 ஆம் ஆண்டு தஹ்ரீகே ஜதீத் திட்டத்தை அறிவிப்பு செய்தார்கள். இந்த அறிவிப்பிற்கு பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின்கீழ் பல்வேறு நாடுகளில் முபல்லிக்மார்களை அனுப்பி வைத்தார்கள். இந்த வகையில் தஹ்ரீகே ஜதீதின் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மிஷன்களில் சிங்கப்பூர் மிஷனும் இடம் பெறும் பாக்கியம் பெற்றது.

வெளிநாடுகளில் ஜமாஅத் மற்றும் மிஷன் ஹவுஸ் ஏற்படுத்தப்பட்டதில் சிங்கப்பூர் ஜமாஅத் மற்றும் இங்குள்ள மிஷன் ஏற்படுத்தப்பட்டது தஹ்ரீகே ஜதீதின் முதல் கனி என்று கூறலாம். சிங்கப்பூர் ஜமாஅத்தின் தற்போதைய தலைமையகம் மற்றும் மஸ்ஜித் தாஹா Onan Road மற்றும் CamPvell என்ற இரண்டு பெரிய சாலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது. இந்த நிலத்தை சிங்கப்பூர் ஜமாஅத்தின் முதல் முபல்லிக்காக இருந்த ஹஸ்ரத் மவ்லானா குலாம் ஹுஸைன் சாஹிப் அய்யாஸ் அவர்கள் 1947 ஆம் ஆண்டு வாங்கினார்கள். இதன் பரப்பளவு 19137 முரப்பா அடி ஆகும். இந்த இடத்தில் மரக்கட்டைகளால் ஆன தங்குவதற்கான ஒரு வீடு இருந்தது. 1983 ஆம் ஆண்டு வரை அந்த கட்டடம் பள்ளிவாசலாகவும், மிஷன் ஹவுஸாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

1983 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் சிங்கப்பூர் சுற்றுப்பயணம் செய்தபோது இங்கு இந்த மைதானத்தில் தாஹா பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். பள்ளிவாசலின் இரண்டு அடுக்கு கொண்ட இந்த கட்டடம் இரண்டு ஆண்டுகளில் முழுமையடைந்தது. இது இரண்டு அடுக்கு மாடிகளை கொண்டதாகும். மேல்பகுதி ஆண்கள் தொழுவதற்கான பகுதியாக உள்ளது. கீழ் தளத்தின் பாதி பகுதி பெண்கள் தொழுவதற்கான சிறப்பான இடமாக உள்ளது. மீதமுள்ள பகுதியில் ஜமாஅத் மற்றும் கிளை அமைப்புகளின் அலுவலகங்கள் உள்ளன.

ஹுஸூர் அவர்களின் வருகையின் காரணமாக பெரும் எண்ணிக்கையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த பல்வேறு நாடுகளிலிருந்து ஜமாஅத் உறுப்பினர்கள் சிங்கப்பூர் வந்தடைந்தனர். இந்தோனேஷியாவிலிருந்து மட்டும் 2000ஐ விட கூடுதலான நபர்களும் சிங்கப்பூர் வந்தடைந்தனர். மலேஷியாவிலிருந்து வரக்கூடிய நபர்களின் எண்ணிக்கை 500ஐ விட அதிகமாகும். விருந்தினர்களின் அதிகமான எண்ணிக்கையின் காரணமாக தாஹா பள்ளிவாசலின் வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள மைதானத்திலும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஜமாஅத் உறுப்பினர்கள் அமர்வதற்கும், தொழுவதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விருந்தினர்களின் வருகை என்ற தொடர், தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த நாள் மிகவும் அருளுக்குரிய நாளாகும். அல்லாஹ் இந்த நாளையும், மகிழ்ச்சி நிறைந்த இந்த நொடிப்பொழுதையும் இந்த மக்களின் நிரந்தர அருட்களுக்கு காரணிகளாக ஆக்குவானாக. ஆமீன். (தொடரும்....)

(தமிழில்: துணை ஆசிரியர்)


**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர, (அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை அளிக்கப்படுவதில்லை). (37:41)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டால், அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் எந்த ஓர் அடையாளத்தைக் காணும் போதும் (அதனை) ஏளனமாகக் கருதுகின்றனர். (37:14,15)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 11 February 2021 Issue No. 6

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஜும்ஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜும்ஆ பேருரை**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பியது தொடர்பாக அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு யமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். இதற்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை, அம்மக்களிடம் (அதாவது யமன்வாசிகளிடம்) அவர்களை இஸ்லாத்தின் பால் அழைப்பதற்காக அனுப்பினார்கள். ஆனால் அந்த மக்கள் நிராகரித்து விட்டார்கள். இதனால் அன்னார் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் யமன்வாசிகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். பிறகு ஹமதான் முழுவதும் ஒரே நாளில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அம்மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை, ஹமதான் மீது சாந்தி உண்டாவதாக என்று கூறினார்கள்.

ஹமதான் யமன் நாட்டில் மதீனாவிலிருந்து தென் திசையில், கிழக்கில் அமைந்திருக்கக்கூடிய மதீனாவிலிருந்து ஏறக்குறைய 1150 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். இதற்குப் பிறகு யமன்வாசிகளும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எழுதியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தா செய்தார்கள்.

(அல்காமில் ஃபீத்தாரீக் தொகுதி 2 பக்கம் 168 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை யமன் நாட்டுக்கு காஸியாக நியமித்து அனுப்பியபோது நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் என்னை அனுப்புகிறீர்களா? நானோ இளைஞன்; எனக்கு நீதித்துறை குறித்து எதுவும் தெரியாது என்று கூறியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நிச்சயமாக! அல்லாஹ் உமது உள்ளத்திற்கு நேர்வழி வழங்குவான். உமது நாவுக்கு உறுதியை வழங்குவான். உமக்கு முன் சண்டையிடக்கூடிய இருவர் அமர்ந்தால், நீர் முதல் நபரிடம் கேட்டதைப் போன்று மற்றவர் கூறுவதையும் கேட்கும் வரை தீர்ப்பளிக்கக்கூடாது. இவ்வாறு செய்தால் உமக்குத் தீர்ப்பு தெளிவாகிவிடக் கூடும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதற்குப் பிறகு எப்போதும் எனக்குத் தீர்ப்பளிப்பதில் ஐயம் ஏற்படவில்லை. (சுனன் அபீ தாவூது... ஹதீஸ் எண் 3582)

ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கலந்து கொண்டவர்களில் ஒருவரான ஹஸ்ரத் அம்ர் பின் ஷஅஸ் அஸ்லமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் யமன் நாட்டுக்குப் பயணமானேன். பயணத்தின்போது நான் அவர்கள் தொடர்பாக எனது உள்ளத்தில் சிறிது உணர்வு கொள்ளவே ஆரம்பிக்கும் அளவுக்குக் கடுமையாக அவர்கள் என்னுடன் நடந்து கொண்டார்கள். ஆக யமன் நாட்டிலிருந்து திரும்பியவுடன் நான் அவர்களுக்கு எதிராகப் பள்ளிவாசலில் முறையிட்டேன். எதுவரையெனில், இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எட்டி விட்டது. ஒரு நாள் நான் பள்ளிவாசலுக்குள் நுழைந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சில சஹாபிகளோடு வீற்றிருந்தார்கள். அன்னாரின் பார்வை என்மீது பட்டபோது அன்னார் என்னை மிகவும் கூர்ந்து பார்த்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை உற்று நோக்கினார்கள். எதுவரையெனில், நான் அமர்ந்தபோது அன்னார், அம்ரே! இறைவன் மீது ஆணையாக! நீ எனக்குத் துன்பம் தந்துள்ளாய் என்று கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களுக்குத் துன்பம் தருவதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஏனில்லை! எவர் அலீக்குத் துன்பம் தந்தாரோ அவர் எனக்கும் துன்பம் தந்தார். இது முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலின் அறிவிப்பாகும்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 478, 479 ஹதீஸ் எண் 16056 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இதற்கு முன் நான் வாசித்தது முஸ்னதின் அறிவிப்பாகும். அடுத்த ஓர் அறிவிப்பு இதுவாகும். ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில் மக்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் குறித்து முறையிட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டேன். மக்களே! நீங்கள் அலீ குறித்து முறையிடாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! அவர் தன்னைக் குறித்து முறையிடப்படுவதிலிருந்து அல்லாஹ்வுக்கு அதிகமாக அஞ்சக்கூடியவர் அல்லது அல்லாஹ்வின் வழியில் அதிகமாக அஞ்சக்கூடியவர் என்று கூறினார்கள். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா பக்கம் 867,868 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது இப்பொழுது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இனி வருங்காலங்களிலும் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

இன்றும் நான் துஆவின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். கடந்த குத்பாவில் அல்ஜீரியா பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அங்கும் அஹ்மதிகளுக்கு மோசமான நிலைமைகள் உள்ளன. சிலர் சிறைபிடிக்கவும் பட்டுள்ளனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் நிலைமைகளிலும் எளிமையை ஏற்படுத்துவானாக. சிறையில் இருப்பவர்கள் விரைவில் விடுதலையாக வழி ஏற்படட்டுமாக. அங்கும் கொடுமையிழைக்கப்படும் நிலைமைகள் உள்ளன. அரசுக்கும் அறிவை வழங்குவானாக. அது நீதியுடன் செயல்பட்டவாறு அஹ்மதிகளின் உரிமைகளைச் செலுத்தக் கூடியதாகத் திகழட்டுமாக.

(தொடரும்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad